istered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

சு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (01.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 244

**Restaurant Tilko**



10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)

Tilko Jaffna City Hotel
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
TILKO (C/1501)
















# சிறுவர் கல்விக்கு சிங்கப்பூர் உதவும்



டக்கில் சிறுவர் கல்விக்கும் யாழ்.நூல் நிலையத்தின் மேம்பாட்டிற்கும் சிங்கப்பூர் முழுமையான ஆதரவையும் உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளது யாழ். விஜயம் மேற்கொண்ட சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்மு கம் உறுதியளித்துள்ளார். யாழ். பொது நூலகத்திற்கு நேற்று விஜயம் செய்த சிங்கப்பூர் அமைச்சர் ஊடகவியலாளர்க ளிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் முதற்தடவையாக யாழ்ப்பாணத்திற்கு வரு கை தந்துள்ள நிலையில் இப்பயணம்

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகரித்தது டீசல் விலை

(யாழ்ப்பாணம்)

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் ஒரு லீட்டர் டீசலனின் விலையை இரண்டு ரூபா வால் அதிகரித்துள்ளதாக அதன் நிர்வாக பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒரு லீட்டர் லங்கா இந்தி யன் ஒயில் நிறுவனத்தின் டீசலின் புதிய விலை 117 ரூபாயாகும்.

## திடீர் இடமாற்றம்

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் எஸ்.தயானந்தா உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு திடீர் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார்.

## பாடசாலை அதிபர் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா சாரதா வித்தியாலய அதிபரும், வவு னியா மாவட்ட ஆசிரியர் சங்கச் செயலாளருமான நேசகுமார் அவரது பாடசாலையில் வைத்து கடு மையாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா தெற்கு வலயத்தி லுள்ள கோமரசன் குளம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் மாணவர்களில் 12 பேர் ஒழுங்கீனமாக நடந்தார் கள் எனத் தெரிவித்து பாடசாலை அதிபரால் கல்வி கற்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தனர். எனி னும் மாணவரின் கல்விக்குத் தடை விதிக்கப்பட்டமை

19 ஆம் பக்கம் பார்க்க

## டுகதி கூரியர் சேவை யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நான்கு மணிநேரத்திற்குள் ண்டு கிலோகிராமிற்குக் றைவான பார்சல்கள், சஞ்சி கள், புத்தகங்களை யாழ். வட்டத்தின் சகல பகுதிகளுக் விநியோகம் செய்யும் எக்ஸ் ஸ் கூரியர் சேவையினை றுமுதல் யாழ். பிரதமதபால ஆரம்பிக்கவுள்ளதாக வட ாந்திய அஞ்சல் மா அதிபர் .இரட்ணசிங்கம் தெரிவித்தார். இன்று காலை 9.00 மணிக்கு ழ். பிரதம தபாலகத்தில் எக்ஸ பிரஸ் கூரியர் சேவை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான கூரியர் சேவை ஏற்கனவே தென்பகுதி தபால கங்களில் ஆரம்பிக்கப்பட்டிருப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே ஆரம்பத்தில் இந்தக் கூரியர் சேவை யாழ். மாவட்டத்திலும் நடைமுறையில் இருந்தது. பின்னர் நடைபெற்ற யுத்த நிலைகளால் அவை நடை பெறவில்லை எனவும் தெரிய வருகின்றது. (பா)

## குற்றவியல் சட்டத்தில் திருத்தம் மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

சாதாரண குற்றவாளிகளை இருநாட்களுக்குத் தடுத்து வைப் பதற்கு ஏதுவாக குற்றவியல் சட் டத்தில் திருத்தம் கொண்டுவரு வது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசித்து வரு கிறது. எனினும் இதற்கு மனித உரிமைகள் அமைப்புக்கள் கண் டனம் தெரிவித்துள்ளன.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் ஆகி யவற்றின் கீழ் தற்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்படாத தால் தடுத்து வைப்பதற்கான கால எல்லை தற்போது 24 மணித்தியாலங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின், ஆணையாளர் கலா நிதி பிரதீபா மஹானாமஹேவா கூறினார். இந்த நிலையில் உத் தேச திருத்தம் காரணமாக சாதக மான பெறுபேறுகளைப் போன்ற பாதகமான விளைவுக ளையும் சந்திக்க நேரிடும் என மனித உரிமைகள் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## எம்பிலிப்பிட்டியில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

எம்பிலிபிட்டி நகர வங்கி ஒன்றுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து எம்பிலி பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குட்டிகல பிரதேசத்தில் கொள்ளையில் ஈடுபட்டு கார் ஒன்றில் தப்பிச் செல்ல முற்பட்டவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

**நாளை முதல் A/L மாதிரி வினாத்தாள்கள்**

நாளைய தினமுரசில்
கொழும்பின் பிரபல
விஞ்ஞான ஆசிரியர்
S.T.ஜனார்த்தனனின்
இரசாயனவியல்
வினாத்தாள் .

## ஆளுநர் செயலகம் யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் செயலகத்தை பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முய ற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்துள்ளார். யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மா காண ஆளுநரின் செயலகமே நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதான வாயிலிருந்து மங்கள வாத்தியம் மற்றும் பண் பாட்டு வாத்தியம் சகிதம் நிகழ்விடத்திற்கு

19 ஆம் பக்கம் பார்க்க



# வன்னி மக்களின் முக்கிய பிரச்சினை வாழ்வதற்கு வீடில்லை-மு.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

கடந்த கால யுத்தத்தால் அனைத்து மக்களின் வீடுகளும் அழிக்கப்பட்டு விட்டன எனவே முற்றாக அழிந்து போன பூமியிலேயே மக்கள் மீள்குடியேறினர். அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இருபத்தையாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் யுத்தத்தால் அழிந்து போனது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிராமத்திற்கொரு வீடு எனும் விசேட வீடமைப்பு கருத்திட்டத்தினை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்தின் பின் இன்று வரை 8 ஆயிரத்து 800 வரையான வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகளை விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில், கிராமத்திற்கொரு வீடு எனும் விசேட வீடமைப்பு கருத்திட்டத்தினை கிளிநொச்சி மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதை நாம் விரும்பி வரவேற்கின்றோம். அதேவேளை இந்திய அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்டதற்கமைவாக இந்திய வீட்டுத்திட்டம் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் மக்கள் எதிர் கொள்ளும் வீட்டுப் பிரச்சினையின் பெரும் பகுதிக்கு தீர்வுகாண முடியும் என நாம் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிராமத்துக்கு ஒரு வீடு என்னும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 95 வீடுகளை நிர் மாணிக்கும் பணி ஆரம்பமானது.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், அக்கராயன் பிரதேச கிராம அலுவலர் சபாரத்தினம், கரைச்சி பிரதேச செயலகத்தின் தலைமைக் கிராம அலுவலர் மகேந்திரன் உள்ளிட்ட பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர்.

## பாலுமகேந்திராவின் 12 குறும்படங்கள்

பாலுமகேந்திராவின் இயக்கத்தில் உருவான 'கதை நேரம்' எனும் தலைப்பில் சுஜாதா, பிரபஞ்சன், திலகவதி, சமுத்திரன், ஜெயந்தன், சுந்தர் ராமசாமி, மாலன், வாசந்தி, சிவசங்கரி, எஸ்.சங்கர நாராயணன், சூரியன் ஆகியோரின் கதை வசனத்தில் நிலம், ஒரு மனுசி, முக்கோண காதல் கதை, காத்திருப்பு, காயம், பிரசாதம், தப்புக்கணக்கு, நம்பிக்கை, பொன்னாசை, அம்மா, அப்பா, என் தாம்பத்திய நினைவுகள் போன்ற பன்னிரண்டு குறும்படங்கள் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்பட விழா நாளை 9.00 - 1.00 மணி வரை, இல. 84 ஜும்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

திரைப்பட ஆர்வலர்கள் இத் திரைப்பட விழாவில் பங்குபற்றலாம்.

மேலதிக தகவல்களுக்கு 0212229873 தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.


## விடுமுறை தினங்களிலும் வங்கிச் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி தனது 51 ஆவது ஆண்டு நிறைவை எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி கொண்டாட இருக்கும் வேளையில், ஆசிரியர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபன, மாகாண, பிரதேச உள்ளூராட்சிச் சபை உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் அனைத்து வாடிக்கையாளர்களதும் நன்மை கருதி யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை வருடத்தின் 365 நாட்களும் இலகு வங்கிச் சேவையை வழங்குவதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் திறந்திருக்கும்.

365 நாட்களும் தங்க நகை அடகு வைத்தல் மற்றும் மீளப் பெறல் போன்ற அடகுச் சேவையும் நடைபெறும் என்பதையும் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## அதிபராகப் பதவியுயர்வு



(யாழ்ப்பாணம்)

அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு ஏ.பொன்சியன் அடிகளார் இன்று முதல் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்றுக் கொள்கின்றார்.

இவர் கடந்த ஆறு வருடங்களாக யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பகுதித் தலைவராக சிறப்புடன் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## தீயில் கருகிய பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை குருநகர்ப் பகுதியில் நடைபெற்ற தற்கொலை முயற்சியின் போது தனக்குத்தானே தீ மூட்டி எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மரியகொறற்றி (ஜீவிதா) (வயது-22) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.(பா)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

(கரவெட்டி)

கரவெட்டி கோவில் சந்தைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஹன்ரர் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் படுகாயம் அடைந்தான்.

இவ்விபத்தில் கோவில் சந்தைப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரஜீகரன் (வயது-24) என்பவரே படுகாயம் அடைந்தார்.

உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (116)

## நூலக வலுவூட்டல் நிகழ்வு

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தினர், நூலக வலுவூட்டல் திட்டத்தின் கீழ் இம்மாதத்தில் தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்பிரகாரம் தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு இலைக்கஞ்சி வழங்கல், முன்பள்ளிகளுக்கான நடமாடும் சேவை, சித்திரம் வரைதல் தொடர்பான பயிற்சி, தமிழ் உச்சரிப்புத் தொடர்பான இறுவட்டுக் கண்காட்சி, புகைத்தல் எதிர்ப்பு தினம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது. (11)


## சிறு விளம்பரம்

### முதலாம் தர மாணவர் அனுமதிக்கான படிவம்

அரச பாடசாலைகளில் 2013ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான, கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை இன்று முதல் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும். படிவ விநியோகஸ்தர் சி.என்.எச். சாள்ஸ். (R/135


## கர்ப்பிணிப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தையைப் பிரசவிக்க முடியாத தாயொருவர் சத்திரசிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் துர்க்காபுரம் தெல்லிப்பளையைச் சேர்ந்த உதயகுமார் மஞ்சுளா (வயது-38) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

சத்திர சிகிச்சையின்போது வெளியே எடுக்கப்பட்ட ஏழு மாத பெண் குழந்தை உயிருடன் தற்சமயம் யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது அதிக இரத்தப் போக்கு காரணமாக குறித்த பெண்ணுக்கு வைத்தியர்களால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் இரத்தப்போக்கு காரணமாகவே அப்பெண் உயிரிழக்க நேரிட்டதாகவும் தெரியவருகின்றது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எழுதுவினைஞராக குறித்த பெண் கடமையாற்றி வந்தாகவும், அவருக்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை இருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா,எஸ்,02)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தாவீது அடிகளாரின் நினைவு நாள்

(பருத்தித்துறை)

அருட்தந்தை கலாநிதி தாவீது அடிகளாரின் 31 ஆவது நினைவு தினம் நாளை சனிக்கிழமை பருத்தித்துறையில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அடிகளாரின் பிறந்த இடமான தும்பளையில் அவர் வாழ்ந்த இல்லத்திலுள்ள திருவுருவப் படத்திற்கு மேலாக நிர்மாணிக்கப்பட்ட நிழல்சாலை நாளை காலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து நினைவு தின நிகழ்வுகள் இடம் பெறும்.

மாலை தும்பளை புனித லூர்து அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக தாவீது அடிகளார் நினைவுக் குழுத்தலைவரும், இளைப்பாறிய ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளருமான ரி.அந்தோனிமுத்து அறிவித்துள்ளார். (01)

## அருட்குருவானவரின் முதல் நன்றித் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி தா. அ.ஜேசுதாசன் அடிகளார் தனது முதலாவது திருப்பலியை இன்று நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

இத்திருப்பலியில் ஆலயப் பங்கு மக்கள் கலந்து கொண்டு அடிகளாரை வரவேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(85)

## புனருத்தாரணம் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் நாகர்கோவில் மேற்கு கவுத்தம்துறை பிள்ளையார் ஆலய புனருத்தாரண வேலைகளுக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று காலை 6.50 மணி தொடக்கம் 8.49 மணி வரையுள்ள சுப மூகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), வடமராட்சி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் த.திருலிங்கநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## மணவாளக் கோல திருவிழா

(பருத்தித்துறை)

அச்சுவேலி, வரணன் அருள் மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமாள் ஆலய மணவாளக் கோலத்திருவிழா நாளை காலை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 10[illegible] சங்காபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து விசேட பூசை ஆ[illegible]னைகளும், வீதியுலாவும் இடம் பெறும். (01)

## முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை - துணைவி அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வைகாசி விசாகத் திருநாளையொட்டிய தேர்த்திருவிழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தேர்த்திருவிழாவையொட்டி காலை 9.00 மணி முதல் தெய்வீகப் பேருரையும் இடம்பெறும்.(60)

## மஹோற்சவம்

(அராலி)

அராலி ஆவரம்பிட்டி அருள் மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலயத்தில் நந்தன வருஷத்துக்கான மஹோற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (60)

## மஹா கும்பாபிஷேகம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சிவன் வீதி சக்கிராலை நடன விநாயகரின் மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 7.20 மணி முதல் 8.35 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறும்.

இதற்கான முன்னாயத்தக் கிரியைகளும், எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வுகளும் நடைபெற்றன.

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் - அரசடிக்காடு அருள் மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் (உபய கதிர்காமம்) 22 ஆண்டுகளுக்குப் பின் இன்று காலை 7.00 மணிக்கு மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மேரி கிரிஸ்வர சர்மா அவர்களின் நெறியாள்கையுடன் மேற்படி விழா நடைபெறவுள்ளது.(60)

தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது - ஹென்றி போர்டு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## எதிரெதிர் இனவாதங்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரால் நடத்தப்படும் பத்திரிகை, திடீரென உச்சஸ்தாயில் இனவாதத்தை உசுப்பிவிடும் செய்திகளை வெளியிடுகிறது. தமிழ் மக்களின் இத்தனை கால அனுபவத்தில், இது ஒன்றில், தேர்தல் வரப்போவதை உணர்த்துகிறது அல்லது உள்வீட்டுப் பிரச்சினைகள் ஏதோ முற்றியிருக்கிறது என்பதாகும்.

இந்த இரண்டுக்குமாகத்தான் இனவாதத்தைத் தூண்டும் விதமான பேச்சுக்கள் எழுத்துக்களை கூர்தீட்டி எடுத்துவிடுவது கூட்டமைப்புக்கு வழக்கம் என்று தமிழ் வாக்காளப் பெருமக்கள் அறிந்து வைத்துள்ளனர். தேர்தலில் உணர்ச்சிகர ஆவேசத்தில் மக்களைத் திரட்டி வாக்குகளை அள்ளலாம் என்பதும், அது போல கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதை மூடி மறைக்க இந்த ஆவேசத்தைப் பயன்படுத்தலாம் என்பதும் ஒரு நீண்ட அனுபவத்தில் அவர்களிடம் நாம் கண்டுவருவதுதான்!

ஒருபக்கம் தேசியக் கொடியையும் தூக்கி சர்வதேசத்திற்கு நல்லதனத்தைக் காட்டிய பிறகு, தமிழ்மக்களிடம் எதற்காக இந்த இனவாத ஆவேசம் காட்டுதல்? சமீபத்தில் தேர்தல் எதற்குமான அறிவிப்பு ஏதும் வரவில்லை என்பதால், கூட்டமைப்புக்குள்தான் ஏதோ குத்துவெட்டு முற்றியிருக்கிறது என்றே ஊகிக்க வேண்டும்.

கூட்டமைப்பை தனியான கட்சியாகப் பதிவு செய்வதற்கு ஒரு கிழமைக்குள் முடிவு சொல்வதாக சுரேசுக்கு சமாளித்து விட்டு, மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்திய சம்பந்தன், தமிழரசுக் கட்சியே பெரும்பான்மைத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது என முழங்கியிருக்கிறார். புலம்பெயர் சமூகத்தவர்களின் பேச்சைக் கேட்டு இங்கு அதிதீவிரமாகக் கொந்தளிப்பவர்களையும் ஒரு பிடி பிடித்திருக்கிறார்.

இதற்கு உடனேயே பதில் தந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், தாங்கள் நால்வரைத் தவிர மற்றைய கூட்டமைப்பு எம்பிக்களை எல்லாம் இப்போது தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுவில் உள்வாங்கியிருப்பதன் மூலம் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிதான் பிரதானமானது என்று கருதுவது தவறு என்று அழுதிருக்கிறார்.

வெறும் நாலு எம்பிக்களுடன் தனது குழுவைத் தனிமைப்படுத்தி விட்டிருக்கும் தமிழரசுக் கட்சியினரின் தந்திரத்தால் மனம் நொந்து போயிருக்கும் சுரேஷ், இப்படியான முயற்சிகளால் சம்பந்தன் தமிழ்தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய சுரேஷ் விடுத்த கோரிக்கைக்கு, தனது தேசிய மாநாட்டால் பதில் சொல்லியிருக்கும் தமிழரசுக் கட்சிக்கு, பாடம் படிப்பிக்க விரும்பினாலும் அது முடியாது என்று சுரேசுக்குத் தெரியும். ஒரு கிழமைக்குள் பதில் சொல்லாவிட்டால், சங்கரி, சித்தார்த்தனைச் சேர்த்துக் கொண்டு தமிழரசுக் கட்சி தவிர்ந்த கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவோம் என்று சும்மா பேச்சுக்கு விட்ட சவால் உண்மையில் சரிவராது என்றும் சுரேசுக்குத் தெரியும். முன்னாள் புலியெதிர்ப்பு ஆயுதக் குழுக்களின் கூட்டு அது என்று ஒரே வசனத்தில் சம்பந்தன் குழுவினர் அதைச் சாய்த்துவிடுவார்கள்.

அதற்காக, தமிழரசுக் கட்சியில் போய் சுரேஷ் சேர்ந்தாலும், சம்பந்தன், மாவை, சுமந்திரனுக்கு அடுத்த இடம்தான் இனி கிடைக்கும். ஒருவேளை சறா கூட, தான் தமிழரசுக் கட்சியில் சீனியர் என்று தன் பத்திரிகை மூலம் நிரூபித்து முந்திவிடக் கூடும்.

கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, சுரேஷ்தான் இறங்கிவந்து, கூட்டமைப்பை இந்த நிலையிலேயே தொடரலாம் என தமிழரசுக் கட்சியுடன் சமரசத்திற்கு வரவேண்டியிருக்கும் என்று தெரிகிறது. இதுக்குப்போய்... மேத்தானந்த தேரருக்குச் சமதையாக இவர்களும் இனவாதத்தைக் கக்கி மக்களைப் பொசுக்கும் கூத்தாட வேண்டுமா என்பதுதான் கேள்வி? - ஆசிரியர் -

# மீள் குடியமர்த்தும் காலத்தை உறுதியாக கூற முடியாது

## – என்கிறார் அமைச்சர் வீரக்கோன்

(கொழும்பு)

வடமாகாணத்தில் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் மீள்குடியேற்றப்படும் கால எல்லையை உறுதியாகக் கூறமுடியாது என மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை மக்கள் மீள்குடியேற்றப்படாத பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னரே, அந்தப் பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப் பணிகள் நிறைவுபெறும் திகதி தொடர்பாக பல்வேறு தரப்பினரும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுவரும் நிலையில் அது குறித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு பெற்று மக்களை மீள்குடியேற்றுவதற்கான அனுமதி கிடைத்தவுடன் வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை அங்கு மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

நலன்புரி நிலையங்களில் மக்கள் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வருவதை தாமும் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த அமைச்சர், அவர்களை இயன்றளவு விரைவில் மீள்குடியேற்றுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகளை அடையாளம் காண்பதில் உள்ள சிக்கல் நிலையே அவற்றை அகற்றுவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என அவர் தெரிவித்தார்.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான கால அட்டவணை ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது வவுனியா நலன்புரி நிலையங்களில் 1,900 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் தங்கியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் பற்றிய விபரங்களை தம்மால் உறுதியாகக் கூற முடியாது எனக் குறிப்பிட்டார்.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு பெற்றவுடன் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# கதிரியக்க பரிசோதனைக்கு உள்ளாகவுள்ள மீன் வகை

இறக்குமதி செய்யப்பட்டரின் மீன் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் வகைகளின் மாதிரிகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த தேசிய அணுசக்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

ஜப்பானின் புகுஷிமா அணு உலையில் கடந்த வருடம் மார்ச் மாதம் ஏற்பட்ட அணு விபத்தை அடுத்து கடல் நீரில் கதிரியக்க துணிக்கைகள் கலந்துள்ளதாக சர்வதேச மட்டத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமையின் கீழ் இலங்கையைச் சுழவுள்ள கடற்பரப்பும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக தேசிய அணுசக்தி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக கடலில் வாழும் மீன்களுக்கும் கதிரியக்க துணிக்கைகளின் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ள அதிகாரசபை, அதனை உறுதிப்படுத்துவதற்காகவே ரின் மீன் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் வகைகளின் மாதிரிகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இந்தப்பரிசோதனை அறிக்கை மூன்று நாட்களுக்குள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கதிரியக்க பரிசோதனைக்காக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவுள்ள அணுசக்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## பேருந்துக் கட்டணத்தை குறைக்கத் தயார்

(கொழும்பு)

உலக சந்தையில் டீசல் விலை குறைந்துள்ளதாலும் மசகெண்ணையின் விலை குறைந்து செல்வதாலும் பேருந்துக் கட்டண மாற்றத்திற்கு செல்ல முடியும் என அகில இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளதால் டீசல் விலையை குறைக்க அரசாங்கத்தால் முடியும் எனவும் அகில இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அங்ஞன பிரியங்ஜித் தெரிவித்துள்ளார். அவ்வாறு டீசல் விலை குறைக்கப்பட்டால் தேசிய பேருந்துக் கட்டண கொள்கைக்கு அமைய பேருந்துக் கட்டணத்தை குறைக்க தாம் தயார் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அங்ஞன பிரியங்ஜித் குறிப்பிட்டுள்ளார்.

## சுவாமி தரிசனம் செய்தவர் மீது தாக்கு

(வடமராட்சி)

ஆலயத்தில் சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டிருந்த வேளை குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் கரவெட்டி மத்திய அத்துழு அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

இதில் கரவெட்டி மத்தி தச்சன்தோப்பைச் சேர்ந்த சாவகச்சேரி மக்கள் வங்கி உத்தியோகத்தரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது - 54) என்பவரே படுகாயமடைந்தவராவார். அப்பகுதி மக்கள் சந்தேகத்திற்கிடமானவர்களை பிடித்து நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (100)

# தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு தமது கோரிக்கைகளை கவனத்திற்கொள்ளாதிருப்பதால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு தகவலும் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்படுவதில்லை என சங்கத்தின் பொருளாளர் யசஸ் முதலிகே கூறியுள்ளார்.

போக்குவரத்துக் கொடுப்பனவு, அலுவலக மற்றும சீருடை பராமரிப்புக் கொடுப்பனவுகளை அதிகரிககுமாறு வலியுறுத்தி இலங்கை பொதுச் சுகாதாரப பரிசோதகர்கள் சங்கம் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சரத் அமுனுகம தெரிவிக்கையில்; கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட யோசனைகளுடன் அவர்கள் இணங்காவிடின் அமைச்சருடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



# வடக்கில் மிதிவெடி அகற்றும் பணிகள் யூலை மாதத்திற்குள் முழுமையாகப் பூர்த்தி

## வடமாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் முழுமையாக நிறைவடையவுள்ளதுடன், இடம்பெயர்ந்த மக்களில் மீதமாக உள்ளவர்கள் இங்கு மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் மற்றும் மிதிவெடியகற்றல் நடவடிக்கைகளானது தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் சரிவர நிறைவேற்ற, மிகுந்த அர்ப்பணிப்புடன் உழைத்த அரச அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். சர்வதேசத்தின் சில அமைப்புக்களால் ஏற்படுத்தப்படும் நெருக்கடிகள் மற்றும் சந்தேகங்களுக்கு மத்தியில் இறுதிக்கட்ட மனிதாபிமான நடவடிக்கைகளின்போது புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 295,873 பேரையும் சிறப்பான முறையில் மீள்குடியமர்த்த நடவடிக்கையெடுத்தமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

அந்த வகையில், நலன்புரி நிலையங்களில் மீதமாக 6,031 பேர் மாத்திரமே எஞ்சியுள்ளனர். இவர்களுள் கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் 2,562 பேரும், ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையத்தில் 3,469 பேரும் தங்கியுள்ளனர்.

இவர்களது பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் மிதிவெடியகற்றும் பணியில் ஏற்படும் தாமதமே மீள்குடியமர்தலில் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாகும். சின்னநகர், புதுக்குடியிருப்பு மேற்கு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இம் மாத இறுதிக்குள் மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் பூரத்தி செய்யப்படும்.

மேலும் புதுக்குடியிருப்பு கிழக்கு, அம்பலவன் பொககணை, மந்துவில், முல்லைத்தீவு மேற்கு மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் யூலை மாத இறுதிக்குள் பணிகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மண்டைதீவு பிரதேசத்தில் முழு அளவிலான மின்சாரம்

## மின்சக்தி அமைச்சர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன் மண்டைதீவு கிராமத்திற்கு முழு அளவில் மின்சாரம் வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க உறுதியளித்துள்ளார்.

மண்டைதீவுப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேறி வாழ்வாதார ரீதியில் வாழ்ந்து வரும் நிலையில் இப்பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக பலமுறை தெரியப்படுத்தியும் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் பாடசாலைகள், பொது நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள், மின்சார தேவைகளுக்காகப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் இக்கிராம மக்களின் மின்சார தேவை குறித்து மின்சக்தி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜருக்குப் பதிலளிக்கையிலேயே அமைசசர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

முப்பத்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்து இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படும்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (23)

# இரணைமடு நீர்ப்பாசன செயற்றிட்டத்தின் கீழ் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மாகாண அமைச்சு வடமாகாண சபையினால் நிறைவேற்றப்படவுள்ள இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் செயற்திட்ட முகாமையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்,பெறுகை நிபுணர். எம்.இ மற்றும் அறிவுசார் முகாமைத்துவ நிபுணர் ஆண், பெண் பால் பயிற்சி மற்றும் சமூக ஒன்று திரட்டல் உள்ளடக்கல் நிபுணர், உள்ளகக்கணக்காய்வு உத்தியோகத்தர், செயற்திட்ட செயலாளர் (2 பதவிகள்) ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதியன்று 57 வயதுக்கு குறைந்தவராக இருக்க வேண்டும்.

ஆகக்கூடிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் நேர்முகப்பரீட்சையில் அவர்களது செயலாற்றுகையின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, இல.330, யூனியன் பிளேஸ், கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண மட்டத்தில் மாணவி சாதனை



(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற மகாணமட்ட தமிழ்மொழித்தின பேச்சுப் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி ரகுமாறன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பேச்சுப் போட்டியில் பிரிவு மூன்றிலேயே இவர் முதலாம் இட்த்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை வவுனியா-இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியலயத்தில் நடைபெற்றது. இம மாணவியின் சாதனையைப் பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்.

# இந்துசமய பொது அறிவுப் போட்டி

(வலிகாமம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இந்து சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வருடா வருடம் நடத்திவரும் இந்து சமயப் பொது அறிவுப் போடடிப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வட்டு.இந்துக் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம், புங்குடுதீவு கனிஷ்ட கமலாம்பிகை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இப்பரீட்சைக்குரிய நிலையங்களாகச் செயற்படவுள்ளன. இத்தேர்வு தரம் 2 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான நேரசூசிகையும், மாணவர்களுக்குரிய சுட்டெண்களும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தரம் 2, 3, 4 மாணவர்களுக்கு காலை 9 - 10 மணி வரையும், தரம் 5, 6, 7 மாணவர்களுக்கு காலை 10.30 - 11.30 மணி வரையும், தரம் 8, 9, 10, 11 மாணவர்களுக்கு பகல் 12 தொடக்கம் ஒரு மணிவரையும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு சுட்டெண்களை வழங்கி உரிய நேரம் பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யுமாறு அறநெறிப் பாடசாலை அதிபர்களைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (06)

# திரிபுபடுத்தப்பட்ட செய்தி; உறவினர்கள் போர்க்கொடி



(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதி வீட்டில் மாரடைப்பால் இறந்த ஒருவரின் சடலத்தினை குறித்த பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்.குடாநாட்டில் வெளியாகும் பத்திரிகை ஒன்றில் வெளியானதையடுத்து இறந்தவரின் உறவினர்கள் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் உயிரிழந்தவரின் சடலத்தினை நீதவான் மற்றும் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். தவறைச் சுட்டிக்காட்டி தகவலை மாற்றுமாறு குறித்த பத்திரிகை நிர்வாகத்திடம் உறவினர்கள் கேட்ட போது பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு, தான்தோன்றித்தனமாக நிறுவனத்தினர் பதிலளித்ததாக இறந்தவரின் உறவினர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.(எஸ்)

# புகைத்தல் எதிர்ப்பு தின நிகழ்வு

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதினம் நேற்றுக் காலை யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலகமுன்றலில் நடைபெற்ற சமுர்த்தி மகாசங்கத்தின் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்நிகழ்வில் பெரும் தொகையான சிகரட்டுகள் தீயிட்டப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களுடன் சமுர்த்தி மகாசங்கத்தின் அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். கொடிவார நிதிச்செயற்பாடுகளையும் யாழ்.பிரதேச செயலர் ஆரம்பித்து வைத்துள்ளார். இந்த வருடமும் கொடிவார நிதியுதவி மூலம் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் தெரிவித்தார். (105)

# வண்.வடமேற்குப் பாலத்தை திறந்துவைக்குமாறு கோரிக்கை

(வண்ணை)

வண்.வடமேற்கு பத்திரகாளி கோவில் வீதியில் அமைந்துள்ள குள பர்லநிர்மாணப் பணிகள் முடிவடைந்து அரை மாதத்தைத் தாண்டிவிட்டபோதும், இன்னமும் பாவனைக்கு அனுமதிக்கப்படாமல் இருந்து வருவதால் மக்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்து வருகின்றனர்.

பாலத்துக்கு அருகாமையில் தற்காலிகமாகப் போடப்பட்டுள்ள ஒரு அடி நடைபாதையால் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை உருட்டியும், தூக்கிய படியுமே பிரயாணம் செய்ய வேண்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அருகிலுள்ள வள்ளுவர் சனசமூக நிலையத்துடன் இணைந்து சில அமைப்புக்கள் சம்பிரதாய பூர்வமாகப் பாலத்தை திறந்து வைக்கும் ஏற்பாடுகளுக்காகவே நாட்கள் பின்னடிக்கப்பட்டு காலதாமதம் செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக அப்பகுதி மக்கள் போககுவரவில் அனுபவித்து வந்த சிரமங்களைக் கருத்திற் கொண்டும் பாலத்தால் சென்று வருவதைத் தாமதப்படுத்தாமல் திறந்து வைக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களிடம் வீதியைப் பயன்படுத்துவோர் கேட்டுக்கொள்கின்றனர். (68)





யு.என்.கபிடாட் நிறுவனத்தினால் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி-மலையாளபுரத்தில் இடம்பெற்றபோது அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் றொபின்மூடி கட்டப்பட்ட வீட்டினைத் திறந்து வைப்பதனையும், யுத்தத்தால் பாதிப்படைந்த பெண்ணுடன் உரையாடுவதையும், அருகில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அவுஸ்ரேலிய பிரதிநிதிகள் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# நவீன கற்பித்தலுக்கேற்ற வகையில் ஆசிரியர்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டும்

## - வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர்

(வலிகாமம்)

ஒவ்வொரு ஆசிரியர்களும், தான் சார்ந்துநின்று கற்பிக்கும் பாடத்தில் மாணவர்களிற்குப் பயன்படும் வகையில் நூல்களை ஆக்கி வெளியிட்டு தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் தங்கள் பாடரீதியான புலமையை, வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதுடன் மாணவர்களிற்கும் சிறந்தமுறையில் வழிகாட்ட முடியும் என வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தமிழ் இலக்கண வினாவிடை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்றைய ஆசிரியர்கள் காலத்தின் தேவைக்கேற்ப நிறையக்கற்க வேண்டியவர்களாகவுள்ளனர். எனெனில் மாணவர்களின் பாடவிதான செயற்பாடுகளில் புதிய புதிய மாற்றங்கள் புகுத்தப்படுவதால் அதற்கேற்றவகையில் ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

எந்தவொரு மொழியிலும் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், கிரகித்தல் என ஐந்து திறன்கள் முக்கியமானவை. எவர் ஒருவர் இவற்றினை திறமையாகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்கின்றார்களோ அவர் மொழியில் தேர்ச்சி பெற்றவராகின்றார். அப்போது தான் எந்தப் பாடத்தையும் மாணவர்களுக்கு கற்பிக்க முடியும். அந்தவகையில் நூலாசிரியரின் இந்த மொழித்தேர்ச்சி இப்பாடசாலையில் மொழியாற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கமுடியும்.

மாணவர்கள் ஆசிரியர்கள் பாடநூல்களுடன் துணைநூல்களையும், கற்றுத் தங்களை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனூடாகவே எல்லாப் பாடங்களிலும் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை அடைய முடியும். நன்நூலை வைத்துக் கொண்டு இன்றைய மாணவர்களிற்கு இலக்கணத்தை இலகுவில் கற்பிக்கமுடியாது. புதிய உதாரணங்கள் மூலம் இலக்கண விடயங்கள் மாணவர்களிற்கு விளக்கப்படுத்தப்பட வேண்டும என்றார். (06)



கிளிநொச்சியில் பிரதம தபாலகம் இருந்த இடத்தில் தற்பொழுது புதிய கட்டடம் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. தற்போது இந்தத் தபாலகத்தின் சேவைகள் தற்காலிகமான ஒரு கட்டடத்தில் நெருக்கடிகளின் மத்தியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம் : ஜெ.கலையகன்.)

# ஆரம்பநிகழ்வு

(பருத்தித்துறை)

கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கன கூட்டுறவுச் சங்க வடமராட்சி கிளை ஆரம்பிக்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சகல அதிபர்கள், ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# "வாழ்வு எழுச்சி" நிகழ்ச்சித்திட்ட பயனாளிகளிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வாழ்வு எழுச்சி (திவிநெகும) நிகழ்ச்சித்திட்ட குடிசைக் கைத்தொழில் கண்காட்சி கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்டு தொழில் முயற்சியை விருத்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவர்களுக்குப் பொருத்தமான தொழில் நுட்ப பயிற்சியும் உதவித்தேவைகளும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் விண்ணப்பிக்கத் தவறிய, குடிசைக் கைத்தொழில் முயற்சியை ஆரம்பிக்க, விருத்தி செய்ய விரும்பும் முயற்சியாளர்கள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அறிவித்துள்ளார்.

# மணல் ஏற்றும் சேவையாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் மணல் ஏற்றும் சேவையில் ஈடுபடும் உழவு இயந்திர உரிமையாளர்களின் தேவைகள், குறைகள் இனம் காணப்பட்டு அதற்கு உடனடியாகவே தீர்வு காணப்பட்டுள்ளது.

மணல் ஓட்டத்தில் ஈடுபடும் உழவு இயந்திரங்களுக்கு மணல் ஓட்டம் சமமாக வழங்கப்படுவதாகவும், அவர்களுக்கான கொடுப்பனவுகளை குறித்த திகதியில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உழவு இயந்திர உரிமையாளர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனைத்து தீர்வுகளும் காணப்பட்டுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு குடத்தனை மணல் ஏற்றும் நிலையத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் த.ரஜீவ் கலந்து கொண்டு உழவு இயந்திர உரிமையாளர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் தேவைகள், குறைபாடுகளை கேட்டறிந்து மணல் ஏற்றும் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு மாதாந்தம் சம அளவு வருமானம் ஈட்டும் செயற்றிட்டங்களை வழங்கியுள்ளார். அத்தோடு மணல் ஏற்றிச் செல்லும் புதிய நடைமுறை குறித்தும் இணைப்பாளர் அங்குள்ளவர்களுக்கு விளக்கமளித்தார்.

இக்கலந்துரையாடலில் மகேஸ்வரி நிதியத்தின் உத்தி யோகத்தர்களான ஆர்.நிரோஷானந், கி.கௌரி மற்றும் உழவு இயந்திர உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (100)

# முரசின் இன்றைய பலன்

(01.06.2012 -வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 19 ஆம் திகதி. துவாதசி பின்னிரவு 12.33 வரை.
நட்சத்திரம் சித்திரை பிற்பகல் 4.21 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 10.22 - 11.52 வரை. சுபநேரம் 5.52 - 07.22 வரை.
எமகண்டம் 2.52 - 4.22 வரை. குளிகைகாலம் 7.22 - 8.52 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பரஸ்பர உதவி, உறவினர் வருகை, குடும்பத்தில் தன்னிறைவு, சுப காரியங்கள். |
| ரிஷபம் | குடும்ப நலம், பொன்பொருள் சேரும், உறவினரை அனுசரிக்கவும், எதிர்பாராத இலாபம். |
| மிதுனம் | தொழில் விருத்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி, தகுதிக்கேற்ற வேலை, பேச்சில் நிதானம் நன்று. |
| கடகம் | குடும்ப சுகம், இடமாற்றத்தால்கவலை, அவதானமாக தொழிலில் ஈடுபடவும், உறவினர் குரோதம். |
| சிம்மம் | பெருமை சேரும், தொட்டதெல்லாம் பொன்னாகும், சுப காரியங்கள் கைகூடும், வேலை வாய்ப்பு. |
| கன்னி | செலவுகள் அதிகரிப்பு, வியாபாரத்தில் சுமாரான நிலை, வாக்குவாதம் தவிர்க்கவும். |
| துலாம் | மனதில் கவலை, மருத்துவச் செலவுகள், நிதானம் அவசியம், பிணை போக வேண்டாம். |
| விருச்சிகம் | பணவரவுகள், எக்காரியத்திலும் வெற்றி, தொழில் மூலம் பிரபல்யம், விரும்பிய இடமாற்றம். |
| தனுசு | பிரச்சினைகள் தீரும், பொன்பொருள் சேரும் வாய்ப்பு, ஸ்தல யாத்திரை, சுப காரியம். |
| மகரம் | எதிலும் இலாபம், மேலதிகச் சலுகை கிடைக்கும், உடலில் சோர்வு, வெளிதேச வாய்ப்பு. |
| கும்பம் | மதிப்பு உயரும், நாணயம் காப்பீர், திடீர் நன்மைகள், இரட்டிப்புச் செலவுகள். |
| மீனம் | பசப்பு வார்த்தைகள், மனதில் தென்பு, முயற்சிகளில் வெற்றி, சேமிப்பு உயரும். |

# வடமராட்சி வலய மட்ட கணித புதிர் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய மட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கணித புதிர் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு,

தமிழ் மொழி மூலம்

தரம் - 06
இ.துவாரகன் - ஹாட்லிக் கல்லூரி, சி.சயந்தன் - ஹாட்லிக் கல்லூரி, க.தனலோஜினா - கம்பர் மலை வித்தியாலயம்.

தரம் - 07
சி.தனுஜன் - ஹாட்லிக் கல்லூரி, இ.கஜிராஜ் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ஜே.விமலன் - ஹாட்லிக் கல்லூரி.

தரம் - 08
கோ.நிரோஜன் - ஹாட்லிக் கல்லூரி, சி.சிவதர்சன் - ஹாட்லிக் கல்லூரி, அ.இமெல்டா - வட இந்து மகளிர் கல்லூரி.

தரம் - 09
த.அபிஷேகா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், க.இராகுலன் - ஹாட்லிக் கல்லூரி, வி.சாலினி - கரணவாய் மகா வித்தியாலயம்.

தரம் - 10
சு.வரதராஜன் - உடுப்பிட்டி அ.மி.த.க, ஜோ.அபிராமி - சிதம்பராக் கல்லூரி, கு.சுபிரணா - ஞானசாலியார் கல்லூரி.

தரம் - 11
வே.கோபிகா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.மதனாகரன் - நெல்லியடி ம.ம.வி, பா.நிஷாந் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

ஆங்கில மொழி மூலம்

தரம் - 06
இ.விவேகா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இ.நஜிதா - வட இந்து மகளிர் கல்லூரி, கோ.கிருஷாந் - ஹாட்லிக் கல்லூரி.

தரம் - 7
பு.மாலணந்தன் - ஹாட்லிக் கல்லூரி, ந.விதூரஷன் - ஹாட்லிக் கல்லூரி, வே.யதீஸ்வர்யா - வட இந்து மகளிர் கல்லூரி,

தரம் - 08
கு.பிருந்தாபன் - விக்னேஸ்வரா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பி.பலாளிகா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, த.சஞ்சித் - ஹாட்லிக் கல்லூரி.

தரம் - 09
சா.பவித்திரா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஆ.சங்கீதா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மோ.சங்கீர்த்தனா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

தரம் - 10
ம.துஷிதா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இ.தர்சனா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ந.திருபரன் - ஹாட்லிக் கல்லூரி.

தரம் - 11
க.மகிந்தன் - ஹாட்லிக் கல்லூரி, வி.விதுர்ஷா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இ.சாம்பவி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (109)



# ஆனந்திற்கு பிரதமர் வாழ்த்து

(புதுடில்லி)

ஐந்தாவது தடவையாக உலக சதுரங்கப் போட்டியில் கிண்ணம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த்திற்கு இந்தியப் பிரதமர் வாழ்த்துக் கூறியுள்ளார். வெற்றி குறித்து பிரதமர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், விளையாட்டு ஆர்வம் கொண்ட, இந்திய இளைஞர்களுக்கு சிறப்பான முன்னுதாரணமாக உள்ளீர்கள். என்றென்றும் நிலைத்து நிற்கும் இச்சாதனையால், தேசமே பெருமைப்படுகிறது, எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆனந்த் தந்தை விஸ்வநாதன் கூறுகையில், ஆனந்த் பெற்ற இந்த வெற்றி வாழ்க்கையின் பெருமைப்படத்தக்க தருணம். ஜெல்பாண்டு எப்போதும் கடினமான வீரர். அவரை வென்றது கூடுதல் பெருமையாக உள்ளது. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன் என்றார். இதேபோன்று அகில இந்திய சதுரங்கக் கூட்டமைப்பு தலைவர் பிரபாகர் கூறுகையில், உலகில் மிகப்பெரிய சாதனை புரிந்த ஆனந்துக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படவேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் மத்திய அரசை கேட்டுக் கொள்கிறோம். இம்முறை இது நிறைவேறும் என்று நம்புகிறோம். இவ்விருதை பெறும் முழுத் தகுதி ஆனத்துக்கு உள்ளது என்றார்.

# ருவென்ரி – 20 முதல் ஆட்டம் இன்று

(அம்பாந்தோட்டை)

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி – 20 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி இன்றைய தினம் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

சொந்த மண்ணில் இலங்கை அணியை எதிர்கொள்வது சற்றுக் கடினமான விடயம் என்றாலும் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்போம் என பாகிஸ்தான் ருவென்ரி – 20 கப்டன் மொகமட் ஹபீஸ் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்றுவிப்பாளராக இணக்கம்

(டாக் கா)

பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட இங்கிலாந்தைச் சேர்ந்த ரிஸ்சேட் பைபர்ஸ் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு பைபர்ஸ் தமது அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. தனிப்பட்ட காரணங்களுக்காக பதவியேற்று ஒன்பது மாதங்களின் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து ஸ்ருவோட் லோ



விலகியிருந்தார். 1999 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக பைபர்ஸ் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரோச்சுக்குப் பதில் சுனில் நரைன்


இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரிலிருந்து மேற்கிந்தியத்தீவு அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரோச் விலகியுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக சுனில் நரைன் தெரிவாகியுள்ளதாக மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்துஅணிக்கெதிரான தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் கேமர் ரோச் நாடு திரும்பியுள்ளார். காலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் நாடு திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளதோடு, இடம்பெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டி, அதனைத் தொடர்ந்தான ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ருவென்ரி - 20 போட்டிகளிலும் கேமர் ரோச் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்துள்ள கேமர் ரோச்சிற்குப் பதிலாக மாயச் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் அறிவிக்கப்பட்டுள்ளார். துடுப்பாட்ட வீரர்களைத் திணறடிக்கக் கூடிய பந்துவீச்சாளராகக் கருதப்படும் சுனில் நரைன், அண்மையில் இடம் பெற்று முடிந்த இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் துடுப்பாட்ட வீரர் களைத் தடுமாறச் செய்ததோடு, போட்டித்தொடரின் நாயகன் விருதையும் வென்றிருந்தார். 15 போட்டிகளில் பங்குபற்றிய சுனில் நரைன், 13.50 என்ற சராசரி யில் ஓவருக்கு 5.47 என்ற ஓட்ட அளவில் 24 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக 8 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் 2 ருவென்ரி -20 போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள சுனில் நரைன், இது வரை டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை. எனினும் உள்ளூர் முதற்தரப் போட்டிகளில் 6 போட்டிகளில் பங்குபற்றியுள்ள அவர் 34 விக்கெட்டுக்களை 11.88 என்ற அதிசயச் சராசரியுடன் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்த டோனி



மோட்டார் சைக்கிள் பிரியரான டோனி, ரூ. 28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஹெல்கேட் என்ற போர் ரக மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் டோனிக்கு, மோட்டார் சைக்கிள் என்றால் கொள்ளை பிரியம். இவரிடம் காவாசாக்கி இசட் எக்ஸ்14, ஹார்லி-டேவிட்சன் உள்ளிட்ட 22 மோட்டார் சைக்கிள் உள்ளன. இந்த வரிசையில் புதிதாக சுமார் ரூ. 28 இலட்சம் மதிப்பிலான எக்ஸ் 132 ஹெல்கேட் என்ற மோட்டார் சைக்கிளை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்துள்ளார். தென் கிழக்கு ஆசியாவிலேயே, இந்த புயல் வேக மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ள முதல் நபர் என்ற பெருமை பெறுகிறார்டோனி. விளையாட்டு வீரர்களில் இங்கிலாந்து கால்பந்து நட்சத்திரம் பெக்காமிடம் இந்த வகை மோட்டார் சைக்கிள் உண்டு.

# ரைடர் நீக்கம்

(ஹமில்டன்)

நியூசிலாந்து அணியின் இடதுகை துடுப்பாட்ட வீரர் ஜெசி ரைடர் இந்த ஆண்டுக்கான தேசிய வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் வீரர்களுக்கான மீளாய்வை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் நியூசிலாந்து அணிக்கான சரியான நேரத்தில் மீண்டும் விளையாட எதிர்பார்த்துள்ளதாக சமூக இணையத்தளம் ஒன்றில் ஜெசி ரைடர் கூறியுள்ளார்.

# வெற்றியில் சாதனை

(பாரிஸ்)

கிரான்ஸ்லாம் ரென்னிஸ் தொடர்களில் அதிக போட்டிகளில் வெற்றிபெற்றவர் என்ற சாதனையை சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் நிலைநாட்டியுள்ளார்.

நடைபெற்று வரும் பிரஞ் பகிரங்க ரென்னிஸ் தொடரில் இரண்டாம் சுற்றுப் போட்டியொன்றில் ரொமேனிய வீரரை வெற்றிபெற்ற ரொஜர் பெடரர் 234 ஆவது வெற்றியைப் பதிவுசெய்தார்.

இதன்பிரகாரம் அதிக கிரான்ஸ்லாம் போட்டிகளில் அதிக வெற்றி பெற்றவர் என்ற அமெரிக்காவின் ஜிம்மி கோணர்ஸ்சின் சாதனையை, அவர் முறியடித்துள்ளார்.

டென்னிஸ் தரப்படுத்தலில் மூன்றாம் இடத்திலுள்ள ரொஜர் பெடரர் 2009 ஆம் ஆண்டு பிரஞ் பகிரங்க டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தினை வெற்றிகொண்டிருந்தார்.

ரொஜர் பெடரர் இதுவரை 16 தடவைகள் கிரான்ஸ்லாம் பட்டங்களை வென்றெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிரிக்கெட் அதிகாரிகளை சந்திக்கிறார் அமிர்

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைஅதிகாரிகளை, வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் அமிர் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்ட நிர்ணயத்தில் சிறைத்தண்டனை பெற்றதைத் தொடர்ந்து அவரின் மறுவாழ்வு நடவடிக்கைகளின் ஒரு முன்னோடியாக இந்த சந்திப்பு இடம் பெறவுள்ளது.

ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் மூன்று மாத கால சிறைத்தண்டனை அனுபவித்த மொஹமட் அமிர் கடந்த பெப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

2010 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதில் குற்றவாளியாக காணப்பட்ட அமிருக்கு ஐந்தாண்டுகள் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனினும் தமக்கு விதிக்கப்பட்ட தடையை குறைக்குமாறு கோரப் போவதில்லை என விடுதலை செய்யப்பட்ட பின்னர் மொஹமட் அமிர் தெரிவித்திருந்தார்.

# 3ஆவது சுற்றில் அசரென்கா வெளியேறினார் செரீனா

(பாரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, முதல் நிலை வீராங்கனை விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) தகுதி பெற்றார். இரண்டாவது சுற்றில் ஜெர்மனியின் தினா பைசன்மேயருடன் நேற்று முன்தினம் மோதிய அசரென்கா 6-1, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் 6-1, 6-4 என்ற நேர் செட்களில் இரினா பால்கோனியை (அமெரிக்கா) வீழ்த்தினார். சாரா எரானி (இத்தாலி), அலெக்சாண்ட்ரா வோஸ்னியாக் (கனடா), டொமினிகா சிபுல்கோவா (ஸ்லோவகியா) ஆகியோரும் 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) தனது முதல் சுற்று ஆட்டத்தில் உள்ளூர் வீராங்கனை வர்ஜினி ரஸானோவுடன் மோதினார் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் ரஸானோ4-6, 7-6 (7-5), 6,3 என்ற செட் கணக்கில் போராடி வென்றார்.





# அணியிலிருந்து விலகுமாறு யுனைட்டட் கிளப் கோரிக்கை

(சிட்னி)

கிரிக்கெட்டையும் விளையாடுவதாக இருந்தால் எங்கள் அணியிலிருந்து விலகி விடுங்கள் என்று அவுஸ்ரேலியாவின் கான் பெரா யுனைட்டட் கால்பந்து கிளப் எலிஸ் பெர்ரியைக் கோரியுள்ளது.

அவுஸ்ரேலிய வீராங்கனை எலிஸ் பெர்ரி (21) கிரிக்கெட், கால்பந்து என இரண்டு விளையாட்டிலும் அசத்தி வருகிறார். 16 வயதிலேயே அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியிலும், கால்பந்து அணியிலும் இடம் பிடித்த பெர்ரி, 2 விளையாட்டிலும் உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்று சாதனை படைத்தார். இந்த நிலையில், அவரை ஒப்பந்தம் செய்துள்ள கான்பெரா யுனைட்டட் கால்பந்து கிளப், கிரிக்கெட் அல்லது கால்பந்து இரண்டில் ஏதாவது ஒரு விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்துங்கள். கிரிக்கெட்டில் தொடர்வதாக இருந்தால் எங்கள் அணியில் இருந்து விலகி விடுங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் கற்ற அனுபவம் குறிக்கோளை நிறைவேற்ற உதவும்



## புனித ஹென்றியரசர் கால்பந்து வீரர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தில் இலங்கைக்காக கால்பந்தாட்டம் விளையாட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். நேபாளத்தில் கற்ற நுட்பங்களும் பெற்ற அனுபவங்களும் எனது குறிக்கோளை நிறைவேற்ற துணை புரியும் என இலங்கை அணியில் இடம்பெற்ற இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த ஞானேஸ்வரன் அன்ரனிராஜ் தெவித்தார்.

நேபாளத்தில் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டக் கொண்டாட்ட விழாவில் கலந்து கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இங்கு உதைப்பதும் ஓடுவதுமாக கால்பந்தாட்டத்தில் ஈடுபடுகின்றோம். ஆனால், எங்களைவிட உருவத்தில் சற்று பெரியவர்களான இந்தியர்களும் நேபாளியரும் பங்களாதேஷியரும் விளையாடிய விதம் எங்களுக்கு பல பாடங்களைக் கற்றுக்கொடுத்தது. அவர்கள் பந்து பரிமாற்றத்தில் (போல் பாஸ் ப்ளே) வெளிப்படுத்திய ஆற்றல்கள் எங்களைத் திருத்திக்கொள்வதற்கு உதவியது. அவர்களை முதலில் எதிர்கொண்டபோது சற்றுத் தயங்கினோம். ஆனால் ஒரு போட்டிகளில் விளையாடிய பின்னர் பயம் தெளிந்தவர்களாக நாங்கள் விளையாடினோம்.

இரண்டு கால்களாலும் விளையாட முடியும் என்பதால் நான் எந்த இடத்திலும் விளையாடுவேன். நேபாளத்தில் ஆரம்பத்தில் நான் முன்வரிசையில் விளையாடுமாறு அழைக்கப்பட்டேன். பின்னர் பின்களத்திற்கு மாற்றப்பட்டேன்.

கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளாரின் ஆசீர்வாதம் அவர் வழங்கும் உதவிகளும்தான் எனது முன்னேற்றத்திற்கு காரணம். யுத்தத்தால் புலம்பெயர்ந்து சென்ற பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்து (1999 மே 15) மீண்டும் இலங்கை வந்தபோது எனது சகோதரனுக்கும் எனக்கும் அடைக்கலம் கொடுத்தவர் அருட்தந்தை.

எங்கள் இருவரது விடுதிக் கட்டணங்களை அருட்தந்தை செலுத்துவதால் நாங்கள் நிம்மதியாக கல்வி பயில்கின்றோம்.

எங்களது பாடசாலையைச் சேர்ந்த அன்ரன் செல்வம் சுகந்தன் என்பவரையும் என்னையும் தெரிவு செய்து இலங்கை கால்பந்தாட்ட குழாத்திற்கு அதிபர் அனுப்பியதாலேயே எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது என அவர் தெரிவித்தார்.

மாவட்ட சம்பியனாகி இலங்கை கால்பந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த புனித ஹென்றியரசர் கல்லூரி அணியில் இடம்பெற்றபோது அன்ரனிராஜ் கால்பந்தாட்ட ஆற்றலை வெளிப்படுத்தியதனால் இலங்கை. கால்பந்தாட்ட தேர்வுக்குழுவின் கவனத்தை ஈர்த்தமை குறிபபிடத்தக்கது.

# ஆவரங்கால் இந்து சம்பியன்



(அச்சுவேலி)

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய இரத்தினம் சுற்றுக் கிண்ணத்திற்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டப்போட்டி போட்டித் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.

இப்போட்டித் தொடர் கடந்த திங்கட்கிழமை மாலை 7.30 மணிக்கு அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமாகின.

முதலாவது போட்டியில் புத்தூர் கலைமதி அணியும், ஆனைக்கோட்டை பிரதீப் அணியும் மோதின. மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் காட்சிப்போட்டி புத்தூர் கலைமதி அணி மூன்று சுற்றிலும் வெற்றி பெற்றது

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்திய அணியும் மோதின. ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மூன்று சுற்றுக்களில் வெற்றி பெற்று இரத்தினம் ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணத்தைச் சுவிகரித்தது. இந்தப் போட்டிக்கு நடுவராக யாழ்மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் சுரேஸ் கடமையாற்றினார்.

மின்னொளியில் இப்போட்டி நடைபெற்றமையால் பெருமளவான ரசிகர்கள் இப்போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (02)

# திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. இரண்டாவது சுற்றுக்குத் தகுதி

டொனால்ட் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்றில் யூனியன் கல்லூரி அணியை திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி வீழ்த்தியது.

யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான டொனால்ட் கணேஸ்குமார் ஞாபகார்த்த 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியும், யூனியன் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி கீரன், டிசாந்தன் ஆகியோர் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீரன் 82 ஓட்டங்களையும், டிசாந்தன் 68 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியில் யூனியன் கல்லூரி அணியால் 83 ஓட்டங்கள் உதிரிகளாக விட்டுக்கொடுக்கப்பட்டது. பந்து வீச்சில் கபில்ராஜ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 362 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன் கல்லூரி அணி 37. 3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. இதில் சதீஸ் கண்ணா 40 ஓட்டங்களையும், தயாளன் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நிலயனன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# வடமாகாண பெரு விளையாட்டு வெளியானது போட்டி அட்டவணை




(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுச் செயலகத்தினால் நடத்தப்படுகின்ற பெரு விளையாட்டுப் போட்டிக்கான அட்டவணைகள் வடமாகாண விளையாட்டுச் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

யூன் மாதம் 9ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

அதன் விபரம் வருமாறு:

பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி யூன் 9, 10ஆம் திகதிகளில் வவுனியா வி.சி. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதே தினம் ஆண், பெண்களுக்கான பட்மின்ரன் போட்டி வவுனியா உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. அத்துடன் அதே தினம் ஆண் பெண்களுக்கான கராத்தேப் போட்டி வவுனியா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டியும் இதே தினம் வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி யூன் 16, 17ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. அதே தினம் ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டம் யூன் 23, 24ஆம் திகதிகளில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதேவேளை, இதே தினம் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் மன்னார் பொது விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. அத்துடன் ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டியும் இதே தினம் இதே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யூடோ போட்டி யூலை 5ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண்களுக்கான கராத்தேப் போட்டி யூலை 7,8ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான மல்யுத்தப் போட்டி யூலை 10ஆம் திகதி கரவெட்டியில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி யூலை மாதம் 12, 13ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

பாரம் தூக்குதல் போட்டி யூலை 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. ஆண், பெண்களுக்கான நீச்சல் போட்டி யூலை மாதம் 17ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண்களுக்கான கால்பந்தாட்டம் யூலை மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்டப் போட்டி யூலை மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, போட்டி அட்டவணை அனைத்து மாவட்ட அணிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், போட்டி ஒழுங்குப்படி அனைத்து மாவட்ட அணி வீரர்களையும் தயாராகி, உரிய காலப்பகுதியில் உரிய இடங்களுக்குச் சென்று போட்டி சிறப்புற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)



# தமிழக அரசியல்வாதிகளே!

## இலங்கைத் தமிழர்கள் வாழ்வுடன் விளையாடுவதை நிறுத்துங்கள்!

**கடந்த தேர்தலில் ஆட்சிபீடத்திலிருந்து அதலபாதாளத்திற்கு (மூன்றாவது இடத்துக்கு) தள்ளப்பட்ட கருணாநிதி, தனது அரசியல் வைரியான ஜெயலலிதாவை நெருக்கடியில் தள்ளுவதற்காகவும், தனது தி.மு.கழகத்தைக் குடும்ப உறுப்பினர்களிடையே முதுசமாகப் பங்கிட்டளிப்பதை எதிர்க்கும் சாதாரண கழகத் தொண்டனை திசைதிருப்பி ஏமாற்றுவதற்காகவும், இத்துப் போன தனது கடந்தகால கொள்கைகளுக்கு வர்ணம் பூசி விற்பதற்காக தெருவோரம் கடை விரிக்க ஆரம்பித்துள்ளார்.**

தமிழ்நாட்டின் இனவாத அரசியல்வாதிகள், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவது கடந்த பல தசாப்தங்களாக நடந்து வருகின்ற ஒரு விடயமாக இருக்கின்ற போதிலும், தற்போது அது மேலும் மேலும் மோசமான ஒரு நிலையை எடுத்து வருகின்றது.

அவர்களுடைய வாய்ச்சவடால்களும், நடவடிக்கைகளும் உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் மீது அப்பழுக்கில்லாத அக்கறையைக் கொண்டிருக்குமாயின், நாம் அதை இருகரம் நீட்டி வரவேற்கலாம்.

ஆனால் அப்படியில்லாமல் தமக்கிடையிலான அரசியல் போட்டி காரணமாகவும், தமிழ்நாட்டு மக்களின் எரியும் பிரச்சினைகளிலிருந்து அம்மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும், அங்குள்ள பிரதான அரசியல் கட்சிகள் செய்யும் அமர்க்களங்கள், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் வளர்க்கவே செய்யும் என்பதை, கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் இந்த 'இனமானம் காக்கும்' அரசியல்வாதிகளுக்கு நாம் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை.

கடந்த காலங்களில் வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், எஸ்.ராமதாஸ், தொல்.திருமாவளவன், சுப.வீரபாண்டியன், கொளத்தூர் மணி போன்ற சில்லறை அரசியல்வாதிகளே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை வைத்து தமது அரசியல் பிழைப்புகளை நடாத்தி வந்தனர். அவர்களது 'பெட்டிக்கடை' வியாபாரத்துக்கு தமிழக மக்களின் ஆதரவு இல்லாது இருந்த போதிலும், தமக்கு ஒரு பிரசார பலத்தைத் தேடுவதற்காக புலிகளின் புலம்பெயர் அமைப்புகள் அவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபா பணத்தை வாரி வழங்கிவந்தன.

அவர்களது காட்டில் புலிகளின் பண மழை பொழிவதைக் கண்ட, தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக் கொண்ட சிலரும் நாக்கில் ஜலம் ஊற வாலை ஆட்டத் தொடங்கினர். அதன் காரணமாக, பல்வேறு 'நக்சல்' குழுக்கள் முதல், போலி இடதுசாரிகளான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் து.ராஜா, தா.பாண்டியன் வரை, எல்லாப் பிழைப்புவாதிகளும் தாம் பேசி வந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவத்தை ஒரு பக்கம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, சிங்கள இனத்துக்கு விரோதமான கடைந்தெடுத்த இனவாதிகளாக மாறினர்.

அவர்கள் எவ்வளவு தூரம் சந்தர்ப்பவாத அரசியல் சகதியில் புரள்கிறார்கள் என்றால், தமிழகத்துக்கு விஜயம் செய்யும் இலங்கை அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு மட்டுமின்றி, சாதாரண கருத்தரங்குகளில் கலந்து கொள்ளச் செல்லும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்குக்கூட இந்த 'உத்தம சோசலிசவாதிகளே' கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவுக்கு அவர்களது சிவப்புச் சாயம் வெளுத்துக் கிடக்கிறது.

சினிமா கழைக்கூத்தாடி சீமான் முதல் காங்கிரஸ் கட்சியின் சில பிரிவுகள் வரை இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை வைத்தே தமது அரசியல் நொண்டிக் குதிரையை ஓட்டி வருகின்றனர். இதில் பழமும் தின்று கொட்டையும் போட்டு, பின்னர் அந்தக் கொட்டையையும் முளைக்க வைத்து, அதிலும் பழம் பிடுங்கிச்சாப்பிட்டுக்கொண்டு இருப்பவர், பல தடவை தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.கருணாநிதி ஆவார்.

கடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சிபீடத்திலிருந்து அதலபாதாளத்திற்கு (மூன்றாவது இடத்துக்கு) தள்ளப்பட்ட கருணாநிதி, தனது அரசியல் வைரியான தற்போதைய தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதாவை நெருக்கடியில் தள்ளுவதற்காகவும், தனது தி.மு.கழகத்தைக் குடும்ப உறுப்பினர்களிடையே முதுசமாகப் பங்கிட்டளிப்பதை எதிர்க்கும் சாதாரண கழகத் தொண்டனை திசை திருப்பி ஏமாற்றுவதற்காகவும், இத்துப் போன தனது கடந்தகால கொள்கைகளுக்கு வர்ணம் பூசி விற்பதற்காக

**தயவு செய்து நீங்கள் எங்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, எங்கள் தலையில் மிளகாய் அரைக்காதீர்கள். எங்கள் விடயங்களை எங்களாலேயே கவனிக்க முடியும். எப்படி 30 வருடங்களாக போரின் வலியை எங்களுக்காக நீங்கள் சுமக்காமல் நாங்களே சுமந்து நின்றோமோ, அதேபோல போர் முடிவுற்ற பின்னரான சமாதானச் சூழலில் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி, ஒரு செழிப்பான வாழ்வை உருவாக்கி வாழவும் எங்களுக்குத் தெரியும்.**

தெருவோரம் கடை விரிக்க ஆரம்பித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் இளைஞர்களின் பல்வேறு போட்டி ஆயுதப் போராட்ட இயக்கங்களும் செயற்பட்ட காலத்தில், கருணாநிதி தான் முன்னின்று உருவாக்கி, பின்னர் புலிகள் அதை நிராகரித்து எம்.ஜி.ஆருடன் கூட்டு வைத்ததால், பரணில் மூட்டை கட்டிப் போட்டிருந்த 'தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு' (டெசோ) என்ற பெயர்ப்பலகையை சமீபத்தில் தூசுதட்டி 'அண்ணா அறிவாலயத்தில்' காட்சிக்கு வைத்துள்ளார்.

புலிகளையும் தமிழ் ஈழக் கோரிக்கையையும் தீவிரமாக எதிர்த்து வந்த ஜெயலலிதா, கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது இலங்கை அரசையும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் கடுமையாக வசைபாடியதால், அதுதான் அவரது தேர்தல் வெற்றிக்கு வழிகோலியது எனத் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்ட கருணாநிதி, ஜெயலலிதாவை முந்துவதாக நினைத்துக்கொண்டு இப்பொழுது இலங்கைத் தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை கருத்துக் கணிப்பு நடாத்தி தமிழீழ தனிநாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என புலம்ப ஆரம்பித்துள்ளார்.

அதுமாத்திரமின்றி, இதுவரை காலமும் மிகக் கவனமாக அவர் பாதுகாத்து வைத்திருந்த மிகப்பெரிய 'இரகசியம்' ஒன்றையும் தனது பாசாங்கு தமழீழ ஆதரவுக்கு வலுச் சேர்ப்பதற்காக வெளியிட்டுள்ளார். அதாவது புலிகளால் கொல்லப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உயிருடன் இருந்த காலத்தில் தன்னுடன் ஒருமுறை கதைக்கும் போது, பிரபாகரன் தலைமையில் இலங்கையில் தமிழீழம் அமைத்துக் கொடுப்பதுதான் தனது இலட்சியம் எனக் குறிப்பிட்டதாக கருணாநிதி தனது கற்பனைக் குதிரையை அவிழ்த்து விட்டுள்ளார்.

எமது மக்களின் ஐதீகத்தின்படி இறந்தவர்களின் ஆவிகள் பூமியில் உலவிக் கொண்டிருந்தால், கருணாநிதியின் இந்த அபாண்டக் கதையைக் கேட்டு ராஜீவ் காந்தி தன்னைப் படுகொலை செய்த புலிகளை மன்னித்துவிட்டு, அந்த இடத்தில் கருணாநிதியைத் தான் நிச்சயமாக வைப்பார்!

கருணாநிதி வயது மூப்புக் காரணமாகத்தான் 'அறளைபெயர்ந்து' இவ்வாறெல்லாம் புலம்புகிறார் என கூறுபவர்களும் உண்டு. ஆனால் கருணாநிதி என்ற 'பல்கலைக்கழகத்தை'ப் படித்தவர்களுக்குத்தான் அதன் உண்மை பொய் தெரியும். அவர் இன்னும் குறைந்தது 10 வருடங்களுக்காவது நல்ல நிதான புத்தியுடனும், குள்ளத்தனத்துடனும் அரசியல் காய்களை நகர்த்தக் கூடியவர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை எத்தனையோ எரியும் பிரச்சினைகள் இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, மின்சாரப் பற்றாக்குறை, தீண்டாமைக் கொடுமை, அயல் மாநிலங்களுடன் நதிநீர்ப் பங்கீடு பற்றிய பிரச்சினை, மீனவர்களுக்கு போதிய வருவாயில்லாமை, கல்வி - சுகாதாரப்பிரச்சினை, ஊழல் - அதிகாரத் துஷ்பிரயோகம் என எண்ணிலடங்காத பிரச்சினைகள் அங்கு உடனடித் தீர்வுக்காகக் காத்துக் கிடக்கின்றன.

அவற்றுக்கெல்லாம் பல தடவைகள் முதலமைச்சர் பொறுப்பு வகித்த கருணாநிதி தீர்வுகாண முயற்சிக்கவில்லை. இப்பொழுது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் ஜெயலலிதாவாலும் முடியவில்லை. தமிழ்நாட்டின் முதன்மை ஆசனத்தில் அமர்ந்த அல்லது அமர்ந்திருக்கும் அவர்கள் இருவருமே கூட எத்தனையோ ஊழல் வழக்குகளில் சிக்கிக் கிடக்கிறார்கள்.

1967 முதல் ஆட்சி செய்து வரும் இரு கழகங்களினதும் அதிகாரத்தின் மீதான தமிழகத்தை எடுத்துக் கொண்டால், கட்சிக்காரர்களும் பேட்டை ரவுடிகளுமே தமிழகத்தின் நகரங்களையும் கிராமங்களையும் ஆளுகிறார்கள். கொள்ளை, கூலிக்குக் கொலை செய்வது, விபச்சாரம், கள்ளச்சாராய விற்பனை, இயற்கை வளங்களைச் சூறையாடுதல், போலி டாக்டர்கள் - பட்டதாரிகளை உருவாக்குவது என தமிழக சமூகம் மொத்தத்திலும் நாறிக் கிடக்கிறது.

அப்படியிருக்க, ஒப்பீட்டு வகையில் தமிழக மக்களைவிட ஓரளவு சிறப்பான வாழ்வை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையுடன் தமிழக அரசியல்வாதிகள் விளையாடி வருவது கடைகெட்ட அயோக்கியத்தனமாகும்.

தயவு செய்து நீங்கள் எங்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, எங்கள் தலையில் மிளகாய் அரைக்காதீர்கள். எங்கள் விடயங்களை எங்களாலேயே கவனிக்க முடியும். எப்படி 30 வருடங்களாக போரின் வலியை எங்களுக்காக நீங்கள் சுமக்காமல் நாங்களே சுமந்து நின்றோமோ, அதேபோல போர் முடிவுற்ற பின்னரான சமாதானச் சூழலில் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி, ஒரு செழிப்பான வாழ்வை உருவாக்கி வாழவும் எங்களுக்குத் தெரியும்.

தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சியினரான நீங்கள் இருவரும் போருக்குப் பிந்திய எமது வாழ்வை நேரடியாகப் பார்க்க இலங்கை வந்த அனைத்துக் கட்சி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில், பங்குபற்றாது விசமத்தனமாக புறக்கணித்துவிட்டீர்கள். அப்படிப் புறக்கணித்துவிட்டு, இலங்கைத் தமிழரின் தற்போதைய நிலை பற்றி இல்லாததும் பொல்லாததும் பேசி வருகிறீர்கள். உங்களுக்கு இங்குள்ள நிலை பற்றி 'உண்மையில்' தெரியாவிட்டால், அந்தத் தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கி வந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவியும், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவியுமான சுஷ்மா சுவராஜிடம் கேட்டாவது தெரிந்து கொள்ளுங்கள். அதை விடுத்து எங்கள் நிலை பற்றி வம்பு தும்பு பேசாதீர்கள்.

நீங்கள் எங்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக்கொண்டு, மீண்டும் மீண்டும் செய்வதெல்லாம் திரும்பவும் எங்களைப் போருக்குள் தள்ள எடுக்கும் முயற்சியே தவிர வேறொன்றும் இல்லை. எனவே தயவுசெய்து எம்மை விட்டு எட்ட விலகி நின்று, எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள்.

உங்களுக்கு அரிப்பெடுக்கும் நேரங்களில் சொறிந்து கொள்வதற்கு ஏதாவது தேவைப்பட்டால், அதற்கு தயவுசெய்து 'தமிழீழத்தை' கையில் எடுக்காதீர்கள். நீங்கள் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னரே அரசியல் ஆதாயம் கருதி பரணில்மூட்டை கட்டிப் போட்ட, உங்கள் 'இலட்சியக் கொள்கையான' திராவிட நாடு அமைக்கும் திட்டத்தைக் கையில் எடுங்கள்!

- நன்றி : வானவில்
(வைகாசி 2012)

# அரசியல், குற்றச்செயல் கட்டுப்பாடு தாய்லாந்துடன் ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

இலங்கைக்கும், தாய்லாந்திற்குமிடையே அரசியல் கலந்துரையாடல் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அன்னியோன்ய சட்டரீதியான ஒத்துழைப்பை வெளிப்படுத்துவது தொடர்பாகவும் இரண்டு ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி தாயலாந்து பிரதமர் ஆகியோர் முனனிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கையின் விவசாயம் கடற்றொழில், கல்வித்துறை மேம்பாட்டுக்காக தாய்லாந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று தாய்லாந்தின் பிரதமர் யின்லக் சினவத்ர இதன் போது தெரீவித்துள்ளார்.

இரு நாடுகளின் பௌத்த மத க்லாசார செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்துக்கு நன்றி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழித்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு அவதானம் கொண்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையில் வர்த்தக முதலீட்டு மட்டங்களை மேம்படுத்துவதற்காக ஒனறிணைந்த குழுவை அமைப்பதன் அவசியம் பற்றியும் இரு நாட்டுத் தலைவர்களும் ஆராய்ந்தனர்.

தாய்லாந்தில் விசேட துறை கல்விக்காக இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கியமை தொடர்பாகவும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தின் போது முக்கியமான துறைகள் பற்றி முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

மாணிக்கக்கல் ஆபரண துறை தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. விவசாய கடற்றொழில் துறைகளில் தாய்லாந்து பெற்ற முன்னேற்றம் தொடர்பாக ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

இலங்கைக்கு தேவைப்படும் தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுத்தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் தாய்லாந்தின் பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

# பாரிய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பில்லை

(கொழும்பு)

இலங்கையில் பாரியளவில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புக் கிடையாது என புவியியல் மற்றும் அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தின் தலைவர் என். ஜீ. விஜேயானந்த தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் சிறியளவிலான நில நடுக்கங்கள் பதிவாகியிருந்தன. இந்த நில நடுக்கங்கள் ஆபத்தானவை அல்ல.

நில நடுக்கம் தொடர்பில் ஆய்வு நடத்தக் கூடிய தகுதியும் திறமையும் உடைய அதிகாரிகளும், தொழில்நுட்பமும் காணப்படுகின்றது.

உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட நில நடுக்கம் தொடர்பான துல்லியமான எதிர்வு கூறல்களை வெளியிட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

நில நடுக்கம் ஏற்பட்டதன் பின்னரே அது தொடர்பிலான தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என விஜயானந்த தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றிலும் மின்சார சேமிப்பு



(கொழும்பு)

அதிக மின் பாவனை செய்யப்படும் நாடாளுமன்றில் மின்சாரத்தை சேமிக்கவும் செயற்திட்டதை நடைமுறைப்படுத்த முடியும் என மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அதன் மூலம் மின்சாரத்தை பாரிய அளவு சேமிக்க முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின் சேமிப்பு குறித்து நேற்று முன்தினம் நாடாளுமன்ற உத்தி யோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத் திட்டமொன்று இடம் பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது தனக்கும் நாட்டுக்கும் செய்யும் நற்செயல் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சிறைக் கைதிகளுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை



சிறைக் கைதிகளுக்கு எச்.ஐ.வி பரிசோதனையை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான பயிற்சித் திட்டம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவின் நிபுணத்துவ வைத்திய அதிகாரி ஜானகி விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர, எயிட்ஸ் நோயைத் தடுப்பது தொடர்பாக சிறைக் கைதிகளுக்கு விளக்கமளிக்கும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டுள்ளதாக நிபுணத்துவ வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது மூவாயிரத்திற்கும் மேற்பட்ட எச்.ஐ.வி தொற்றுள்ளவர்கள் இருப்பதாகவும் இதுவரை 320 பேர் எயிட்ஸ் நோய் காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# எதிர்க்கட்சிகள் அனைத்தும் தெரிவுக்குழுவில் இடம்பெறும்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்து எதிர்க் கட்சிகளும் பங்கேற்கும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக நிமால் சிறிபால டி சில்வாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நாட்டின் சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணும் புதிய முனைப்புக்களுக்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புகளில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முக்கிய பங்காற்றுவார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மீளவும் வலியுறுத்தும் கரு



(கொழும்பு)

தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சநதிப்பொன்றில் கட்சியின் நாடாளுமன்ற உறுபபினர் கரு ஜயசூரிய இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு முன்னர் பூரண அதிகாரம் கொண்ட சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவையும், அரச சேவை ஆணைக்குழுவையும் ஸ்தாபிக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக அவர் கூறினார்.

இதேவேளை தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் விடயங்களில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து செயற்பட முடியும் எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டார்.

அரசியலில் வெவ்வேறு கட்சிகள் என்ற ரீதியில் செயற்படுகின்ற போதிலும், தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் விடயங்களில் அவருடன் ஒன்றிணைந்து செயற்பட தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு சில கடமைகள் உள்ளதாகக் குறிப்பிட்ட கரு ஜயசூரிய, அவர் தைரியம் உடையவர் எனவும் அவர் தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் கூறினார்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத் துவதே அனைவரினதும் தற்போதைய தேவையாக உள்ளதெனவும் கரு ஜயசூரிய மேலும் சுட்டிக் காட்டினார்.

# பெரும்பான்மையான மக்கள் அரசின் மீது கடும் அதிருப்தி

## என்கிறார் மங்கள



(கொழும்பு)

பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்த அதிருப்தியாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னமும் பு,ரணமான ஆதரவினை வழங்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தியுடன் காணப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாக அவர் குறிபபிட்டுள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க மாட்டார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, அதிகளவான மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது இன்னமும் முழுமையான நம்பிக்கை கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார். கட்சியில் சில உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுவதாகவும் அவற்றை ஒரு தேர்தல் வெற்றியின் மூலம் இல்லா தொழிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையைத் திரட்டும் கல்வி அமைச்சு

(கொழும்பு)

பாடசாலை வகுப்புகளில் அளவுக்கதிகமாக மாணவர்கள் உள்ளதாக செய்திகள் வெளிவந்த நிலையில், ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அனைத்து தேசிய பாடசாலைகளையும் கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சில வகுப்புகளில் 45 மாணவர்கள் உள்ளனர். இந்நிலை தொடர அதிபர்கள் அனுமதிக்கக்கூடாது எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச தராதரங்களின்படி ஒவவொரு வகுப்பிலும் 35 மாணவர்களே இருக்க வேண்டும். எனினும் நாம் 42 மாணவர்களை நியமமாக நிர்ணயித்துள்ளோம். ஆனால் சில பாடசாலைகளில் இந்த விதி பின்பற்றப்படுவதில்லை. சில பாடசாலைகளில் மாணவர்களின் வருகைப் புத்தகத்தில் சில மாணவர்களின் பெயர்கள் பதிவுசெயயப்படாமலும் உள்ளன.

ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு 356 தேசிய பாடசாலைகளின் அதிபர்களையும் நான் கோரவுள்ளேன் என அமைச்சர் கூறினார்.



# சரத் பொன்சேகா!

இராணுவம் அங்கு இருக்க வேண்டும். இராணுவத்தை வெளியேற்றுமாறு தமிழ்க் கட்சிகள் கோரக் கூடாது. 200 தீவிரவாதிகள் சேர்ந்தால் குண்டு வெடிப்புகள் மூலம் இப்போதிருக்கும் நிலையை தலைகீழாக மாற்றிவிட முடியும்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நான் எப்பொழுதும் ஒரே கொள்கையிலேயே உள்ளேன். யுத்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. யுத்தக் குற்றங்கள் இடம்பெறாத வகையிலேயே நான் யுத்தத்தை முன்னெடுத்தேன். தரையில் நடந்த போரை திட்டமிட்டவன் நான். முன்னெடுத்தவன் நான். நான் அதை முறையாக சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையில் முக்கியமாக அங்கிருந்த இரண்டரை இலட்சம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே இந்த யுத்தம் திட்டமிடப்பட்டது, முன்னெடுக்கப்பட்டது.

ஆயிரக் கணக்கானோர் கொல்லப் பட்டார்கள், மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டன என்பனவற்றை நான் மறுக்கிறேன்.

போரின்போது 4 வீரர்கள், 8 வீரர்கள் எனப் பிரிக்கப்பட்ட குழுக்கள் ஒவ்வொன்றையும் நான் தொடர்ந்து கண்காணித்து வந்தேன். அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள் என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படாத பாதுகாப்பு வலயங்களை நாங்கள் உருவாக்கித் தந்தோம்.

அங்கிருந்த மக்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள்?, யுத்தத்தின்போது அவர்கள் எங்கு இருந்தார்கள்?, எங்கு சென்றார்கள்?, அவர்கள் இருந்த இடங்களில் அவர்களுக்கான பாதுகாப்பு காணப்பட்டதா? என்பவை தொடர்பில் மிகவும் சூட்சுமமான முறையில் கண்டறிந்தே யுத்தத்துக்கான திட்டங்கள் வரையப்பட்டன. அதனால், 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப் பட்டார்கள் என்ற கதையை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

விடுதலைப் புலிகளைக் கண்காணிப்பதற்காக ஆளற்ற விமானங்களைப் பயன்படுத்தினோம். ஒருபோதும் நாங்கள் தீவிரவாதிகளைப் போல நடந்து கொள்ளவில்லை. அதனால்தான் 2,70,000 தமிழர்கள் எங்கள் பகுதிக்கு வந்தார்கள்.

இது தவிர, வெறுமனே குற்றச்சாட்டை சுமத்தும் நோக்குடன், இப்படி சூடு நடத்தினார்கள், துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று கூறித்திரிவதால் மட்டும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. யுத்தத்தை முன்னெடுத்த இராணுவத் தளபதி என்ற வகையில், இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட விதம் தொடர்பில் விளக்கமளித்து நாட்டினதும் இராணுவத்தினரதும் நற்பெயரைப் பாதுகாப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நான் தயார்.

- சரத் பொன்சேகா விடுதலையான பின் அளித்த பேட்டியில்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா சில காலமாக அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி வந்தமை தெரிந்ததே.

தெற்கு அரசியலில் பொன்சேகாவுக்குள்ள மிகப் பெரும் சாதகமான அம்சம் விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்த இராணுவத் தளபதி என்ற புகழே. அதுவே இன்னமும் அவரது அரசியலுக்கு உதவியாக அமைந்துள்ளது.

விந்தையான ஒரு விடயம் என்னவென்றால் அவருக்கு கடந்த காலத்தில் தமிழ் மக்களின் ஆதரவு கிடைத்தமையே. போரின் விளைவாக தமிழ் மக்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்த போதிலும் போரை முன்நின்று நடத்திய இராணுவ தளபதிக்கே அவர்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது வாக்களித்தனர்.

அந்த ஆதரவு இன்னமும் இருக்கலாம். கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கத்தையும் சில மூத்த இராணுவ அதிகாரிகளையும் சாடிய உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் அமைப்புக்கள் முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராக குரல் எழுப்பவில்லை. மனித உரிமைகளைப் பற்றி அக்கறை காட்டும் அரசசார்பற்ற அமைப்புக்களும் அவரை குறை கூறவில்லை.

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையில்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

பொன்சேகாவிடம் அளவுக்கதிகமான ஆணவம் நிறைந்திருந்தது. ஹனிபால், அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீசர், நெப்போலியன் மற்றும் றோமல் ஆகியோரின் கூட்டுக் கலவைபோல அவர் தன்னைக் காண்பித்துக் கொண்டார். சரத் பொன்சேகாவின் சுய சிந்தனைகளில் அவர், தான் இலங்கையின் மிகப்பெரிய ஒரு இராணுவ பொக்கிஷம் என்றும், அதற்கு மகிமை கிடைப்பதெல்லாம் தன்னால் மட்டுமே என்கிற எண்ணமே நிறைந்திருந்தது. அது "நான், எனது, என்னால் மட்டுமே" என்கிற நோயின் அறிகுறி.



சரத் பொன்சேகாவின் சண்டையிடும் குணமுடன் அச்சுறுத்தி கேலி செய்தல், மற்றும் தற்பெருமை மனப்பான்மை என்பனவற்றையிட்டு பெரும்பான்மையான அவரது சமகால அதிகாரிகள் சினம் அடைந்திருந்தார்கள். தொழில் முறையில் அவரை வியந்து பாராட்டினார்கள், ஆனால் தனிப்பட்ட முறையில் அவரை வெறுத்தார்கள்.

இழிவான ஏனைய குணவியல்புகளும் அவரிடம் காணப்பட்டன. ஒரு வேட்டைக் குணமுள்ள போர்வீரன் என்றவகையில் அவரது மனித உரிமைச் சாதனைகள் படு பாதாளத்தில் தள்ளப்பட்டிருந்தன. உதாரணத்துக்கு 1990இல் அம்பாறை மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் இளைஞர்களின் கொலை இடம்பெற்றது, அது இவரது கட்டளையின் கீழேயே நடந்திருந்தது.

சமீபத்தில்கூட சில ஊடகவியலாளர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பொன்சேகாவின் கைக்கும் தொடர்புள்ளதாக சந்தேகம் எழுப்பப்பட்டது. ஜானக பெரேராவை போல சரத் பொன்சேகாவின் பெயரும் பல மதிப்பான மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் விசாரணக் குழுக்களின் அறிக்கைகளிலும் சுட்டிக் காட்டப் பட்டிருந்தது. ஜானக மற்றும் சரத் ஆகியோர் ஒருவரை ஒருவர் வெறுத்தாலும், அவர்கள் இருவரினதும் போக்கு ஒரே படகிலேயே பயணம் செய்வதைப் போலவே இருந்தது.

வெவ்வேறு கால கட்டங்களில் முன்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோர் இவர்கள் இருவரையும் இராணுவ தளபதிகளாக நியமிப்பதற்குத் தயக்கம் காட்டினார்கள்.

உயர் இராணுவ பதவிகளைப் பெறுவதில் அவர்களது சாதகமான இராணுவ நற்பெயர்களைக் காட்டிலும், எதிர்மாறான பண்புகளே அவர்களது வழியை தடைசெய்து நின்றன. சந்தேகம் மற்றும் உள்ளக சதி முயற்சிகள் பற்றிய அச்சம் ஆகியவையே இதற்கு பங்களிப்பு செய்த மற்றொரு காரணி.

ஜானக மற்றும் சரத் ஆகியோர் ஒரு சதி முயற்சியை மேற்கொள்ளக் கூடும் என்கிற பயப்பிராந்தி (ஒரு வேளை நியாயமற்றது) பொதுவாக நிலவியது. 1962 முதல் ஆட்சி செய்த அரசுகளிடையே உருப்பெறாத சதிமுயற்சி பற்றிய நிரந்தர கவலை இருந்து வந்தது. இந்தக் காரணங்களினால்தான் சரத் பொன்சேகாவுக்கு அவருக்கு உரிய இடமாக அவர் நினைத்த இராணுவத் தளபதி பதவி எப்போதும் மறுக்கப்பட்டு வந்தது.

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையில்.




## விநோத ஊர்வலம்!

லண்டனில், எதிர்வரும் ஜூலையில் ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ளது. போட்டி தொடங்கி விட்டால், ஒட்டுமொத்த இங்கிலாந்து மக்களின் கவனமும், அதில் சென்று விடும் என்பதால், லண்டன் சுகாதார மையம், இப்போதே எச்சரிக்கை மணி அடித்துள்ளது. "அந்த நேரத்தில், அபாய கட்டத்தில் இருக்கும் நோயாளிகளுக்கு, இரத்த தானம் செய்வதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். அப்போது வழக்கத்தை விட, 30 சதவீதம் அதிகம் இரத்தத்தை இருப்பு வைக்க வேண்டும். அதற்கு இப்போதே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்..." என, சுகாதார மையம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது.


இந்த எச்சரிக்கை அறிவிப்பைப் பார்த்ததும், லண்டனைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் உடனடியாக களத்தில் இறங்கினர். எட்டுப் பேர் கொண்ட ஒரு குழு, உள்ளாடைகளை மட்டும் அணிந்து, தங்கள் உடலில் வித்தியாசமான ஓவியத்தை வரைந்தனர். ரத்த நாளங்கள் மற்றும் இதயம் ஆகியவை, வெளியில் தெரிவது போன்ற ஓவியத்தை, தங்கள் உடலில் வரைந்து, தெற்கு லண்டனில், மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் தெருக்களில், இரத்த தானத்தை வலியுறுத்தி, விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தினர். இவர்களின் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தைப் பார்த்து விட்டு, ஏராளமானோர் இரத்த தானம் செய்ய முன்வந்துள்ளனர்.

## தெரிந்து கொள்வோம்!

- எள்ளின் விதை ஒரு கிராமில் 230இல் ஒரு பங்கு எடை.
- புகையிலை விதையின் எடையோ ஒரு கிராமில் 7,000இல் ஒரு பங்கு.
- ஆர்ச்சிஸ் என்ற செடியின் விதைதான் மிக மிகச் சிறியது, ஓர் அரிசியில் 15,000இல் ஒரு பங்கு எடைதான் இருக்கும்.
- மாலைதீவில் வளரும் கடல் தென்னையின் விதை மிகப் பெரியது. எடை 10–15 கிலோ இருக்கும்.
- கடல் பனை விதையின் எடை 22 கிலோ. மிகவும் பெரிய விதை இதுதான்.
- ஜானாலியா என்ற தாவரத்தின் விதை 8 செ.மீ. நீளமும் 5 செ.மீ. அகலமும் இருக்கும்.







- கஞ்சம் நதியின் பழைய பெயர் ரிஷி குல்யா. கஞ்சம் நதி கலிங்கத்தில் ஓடும் நதியாகும்.
- கலிங்கம் என்பது ஆடையைக் குறிப்பது. கலிங்க நாடு மெல்லிய மஸ்லின் துணிகள் தயாரிப்புக்குப் பெயர் பெற்றதாக இருந்தது. அதனாலேயே மெல்லிய துணிகள் கலிங்கம் என அழைக்கப்பட்டது.
- கோரிங்கா என்ற நகரம் கோதாவரி நதியின் முகத்துவாரத்தில் இருந்த பெரிய புகழ் பெற்ற துறைமுக நகராக இருந்தது. யாத்திரிகர் பிளினி இந்த நகரை "கலிங்கோ" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நகர் இப்போது சிறப்பாக இல்லை.
- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் இந்தியாவின் உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருதைப் பெற்றிருக்கிறார்கள். ஜவஹர்லால் நேரு, அவரின் மகள் இந்திராகாந்தி, அவரின் மகன் ராஜீவ்காந்தி.
- நாணயத்தில் தன் உருவத்தைப் பொறித்த முதல் அரசர் அலெக்சாண்டர். கி.மு. 336இல் இவர் தனது உருவத்தைப் பொறித்து வெளியிட்டார்.




# ரஜினி என்னும் சினிமா நடிகர்

– பேயோன் –

ரஜினிகாந்த் யார் என்று கேட்டால் சின்னக் குழந்தையும் சொல்லும் என்று ஒரு திரைப்பாடல் இருக்கிறது. குழந்தைகள் மட்டுமா, பெரியவர்கள் கூடச் சொல்வார்கள். ஏனென்றால் ரஜினி கவராத வயதே இல்லை. மனித வயதுகளில் எந்த வயதை எடுத்துப் பார்த்தாலும் அதைச் சேர்ந்தவர்கள் யாராவது ரஜினி இரசிகராக இருப்பார்கள்.

அவருக்கு 1,50,000 இரசிகர் மன்றங்கள் இருப்பதாக ஒரு இணையப் புள்ளிவிவரம் கூறுகிறது. சில நடிகர்களுக்கு இரசிகர்கள்கூட அந்த எண்ணிக்கையில் இருப்பார்களா என்பது சந்தேகமே.



ரஜினி ஒரு “மசாலா” நடிகர் என்பதாகவே பொதுப்புத்தியில் பதிந்திருக்கிறது. மசாலா என்பது தீமை என்கிற பார்வையிலிருந்து வருகிறது இந்தச் சிந்தனை. உண்மையில் ரஜினி நடிக்காத பாத்திரங்களே இல்லை. பற்ற வைக்கும் பரட்டையாக, இராணுவ வீரராக, கோவிலில் கடவுள் சிலையுடன் வாக்குவாதம் செய்யும் கடத்தல்காரராக, கன்னட சாமியாராக, யானை வளர்ப்பவராக, பணக்காரராக, ட்ரம்ஸ் கலைஞராக, தொழிலதிபராக, நேர்மையான பொலிஸ் அதிகாரியாக, பெண் தொழிலதிபரின் கொட்டத்தை அடக்கும் தொழிலாளியாக, பால்க்காரராக, நியாயமான ஆட்டோ ஓட்டுநராக, பாடகராக, ஜமீன்தாராக, மனநல மருத்துவராக, ஏன், நடமாடும் இயந்திரமாகக் கூட நடித்திருக்கிறார். இதை விட்டால் தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, பெங்காலி, ஆங்கிலம் ஆகிய மொழிப் படங்களிலும் நடித்துள்ளார்.

தீவிர சினிமா ஆர்வலர்கள் ரஜினியின் நடிப்பிலுள்ள “ஸ்டைல்” என்கிற விசயத்தை ஒரு குறையாகச் சொல்கிறார்கள். நான் அதை அப்படிப் பார்க்கவில்லை. நடிப்பில் அதுவொரு அணுகுமுறை என்பது என் துணிபு. வசனம் பேசி முகபாவத்தைக் காட்டி புனைவினுள் புகுந்தேறி நடிப்பது ஒரு உத்தி என்றால், நடிப்புடன் நடனத்தைக் கலந்து இன்னொரு கலை வடிவத்திற்குத் தாவுவது மறு உத்தி. ரஜினியின் பிரபல “ஸ்டைல்”களாகிய சிகரெட்டைத் தூக்கிப் போட்டு வாயிற் பிடித்தல், தலைமுடி கோதுதல், துண்டினை பலமுறை சுழற்றித் தோளில் போடுதல் ஆகியவை நடப்பது, உட்காருவது போன்ற அன்றாட உடலசைவுகள் அல்ல. ரஜினி ஸ்டைல்களை நிதர்சனத்தில் யாரும் செய்வதில்லை. அவை புனைவுத் தன்மை கொண்டவை. நடன அசைவுகளைப் போன்றவை. தலையைக் கோதுவது, சிகரெட்டை வாயால் பிடிப்பது எல்லாம் நடன முத்திரைகள்தாம். இது ரஜினி சிறுவயதில் யட்சகானம் நிறைய பார்த்திருக்கக் கூடியதன் விளைவாக இருக்கலாம்.

ரஜினிக்கு உலகம் முழுவதும் இரசிகர்கள் இருக்கிறார்கள் மற்றும்/அல்லது ரஜினி இரசிகர்கள் உலகெங்கும் பரவியுள்ளார்கள். ரஜினி பற்றிய விக்கிபீடியா கட்டுரை ஜெர்மன், ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜப்பானியம், சீனம், நோர்வீஜியன் உட்பட பதினொரு மொழிகளில் கிடைக்கிறது. விக்கிபீடியா கட்டுரைகள் என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா போலின்றி அன்பால் சேர்ந்த கூட்டத்தினரால் எழுதப்படுபவை என்பது தெரிந்ததே. என்னதான் அவர் பெயர் “ரசினிகாந்து” என எழுதப்பட்டாலும்.

ரஜினி இரசிகர்கள் உலக வியாபகம் பெற்றிருப்பினும் இவருக்கு அதிக இரசிகர்கள் உள்ள தேசம் ஜப்பான் ஆகும். இந்த இரசிகர்களை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். நான் அடிக்கடி வருகை புரியும் ஜப்பானிய நகரமான ஒசாகாவில் இவருக்குத் தெருவிற்குத் தெரு இரசிகர் மன்றங்கள் இருக்கின்றன.

கோபயாஷி நகரில் ரஜினி பெயரில் இருக்கும் தேநீர் விடுதியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். புகழ்பெற்ற. ஜப்பானிய தேநீர்ச் சடங்குகள் இந்தக் கடையில் ரஜினி ஸ்டைலில் செய்யப்படுகின்றன. நாமிங்கே “ரஜினிசார்” என்று சொல்வது போல ஜப்பானில் அவரை “ரஜினிசான்” என்கிறார்கள். இது ஜாக்கி சானில் வரும் “chan” அல்ல. ஜப்பானில் வயதில் குறைந்த பெண்களைக் குறிக்கத்தான் “chan” என்பார்கள். ரஜினிசான் இல் வருவது மரியா தையைக் குறிக்கும் san.



கே.பாலசந்தர் தயாரித்து கே.எஸ். ரவிக்குமார் இயக்கிய முத்து, ஜப்பானில் “முத்து மகாராஜா”வாக வசூல் சாதனை படைத்தது. பாலசந்தர் இயக்கியிருந்தால் இது நடந்திருக்காது என்பது வேறு. ரஜினிக்கும் ஜப்பானுக்கும் உள்ள தொடர்பானது முத்து படத்தில் தொடங்கியதோடு முடியவில்லை. மணிரத்னத்தின் தளபதியில் “சுந்தரி, கண்ணால் ஒரு சேதி” பாடலில் ரஜினி “ரோனின்” வேடத்தில் கொண்டையும் அதனூடே ஒரு சுள்ளியுமாக வருவார். “ரோனின்” என்பவர் வேலையில்லாத சமுராய்.

அத்தோடல்லாது, ஜப்பானின் தொழில்நுட்ப உயர்வும் மோகமும் உலகறிந்தவை. எந்திரன் படப் பாடல்களில் ஜப்பானிய பிரேஸ்புக்கைச் சேர்ந்த பல வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. அறிபுனை ஆடிவெள்ளி போல் எடுக்கப்பட்டதால் ஜப்பானிய இரசிகர்களை “எந்திரன் கவர்ந்திருப்பான்” என்பதில் சந்தேகம் இல்லை.

எவ்வளவு பெரிய மலையானாலும் அடிவாரம் என ஒன்று இருப்பது போல ரஜினியிடமும் சில குறைகள் உள்ளன. முதல் குறை அவரது தமிழ் உச்சரிப்பு. பல பத்தாண்டுகளாகத் தமிழ்நாட்டில் இருந்தபடி ஏராளமான படங்களில் தமிழ் வசனம் பேசி நடித்த ஒரு நடிப்பாளுமைக்குத் தமிழ் உச்சரிப்பு ஏனோ பயிற்சியாகவில்லை. இன்றைக்கும் கன்னட ஒலியுடனே பேசுகிறார்.



இதையும் மீறி “என் வழி தனி வழி”, “நான் ஒரு முறை சொன்னால் அது நூறு முறை சொன்ன மாதிரி”, “கதம் ஹதம்” போன்ற வசனங்கள் மக்கள் பேச்சில் கலந்துவிட்டன என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இன்னொரு குறையானது, அவருக்கு நடிகர் திலகம் போலவோ கமல் போலவோ அழ வரவில்லை. இத்தனைக்கும் அவர் இருவரோடும் சில படங்களில் நடித்திருக்கிறார். ரஜினியின் அழுகையில் விரக்தி ததும்புகிறதே தவிர நாயகன், தேவர் மகன் பட அழுகைகள் போன்று வேதனையும் தத்துவமும் கலந்தாற்போல் வெளிப்படவில்லை. ஒருவருடைய அழுகையை வைத்து அவரது திறமையை எடைபோடக் கூடாதுதான். ஆனாலும் சற்றுக் கூடுதலாக அழுதிருக்கலாமே என்கிறேன், அவ்வளவுதான்.

ரஜினியை அரசியலுக்கு இழுக்கும் முயற்சிகள் செவ்வனே நீண்டகாலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. இது அவர் கலைஞர் என்பதால் இருக்கலாம். ஆனால் அவரது கலை, திரைப்படக் கலை சார்ந்ததே தவிர அரசியல் சார்ந்ததல்ல. ரஜினியிடம் ஒரு கலைஞனுக்குரிய வெகுளித்தன்மை இருக்கிறது. அரசியலில் அழுக்காறு, அவா, இன்னாச்சொல் போன்றவைக்கு இடமிருக்கிறது. வெகுளிக்கு இல்லை.

கடைசியாக ஜப்பான் தொடர்புகளில் விடுபட்டுப்போன ஒன்றை முத்தாய்ப்பாக வழங்கிட விரும்புகிறேன். இந்த ஆண்டு (2011) ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமிப் பேரழிவுகளில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டபோது அவர்களுக்கு உதவ ரஜினி நிறைய நிதி அளித்ததோடு சக நடிகர்களையும் உதவச் செய்தார்.

---


# எதிர்ப்புக் குரல்களின் அபத்தம்!

– ஜெயமோகன் –

இந்திய அரசியல்வாதிகள் ஈழ அவலத்தைக் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் அரசியல் ஒன்று உள்ளது. அவரவர் வெறுப்பு உள்ளது. அதற்கு ஈழ அவலத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதே ஒவ்வொருவரும் செய்யும் முயற்சியாக இருக்கிறது.

ஒருவர் இந்திய தேசிய எதிர்ப்பாளர் என்றால் அவருக்கு ஈழ அவலமே மைய ஆயுதம். ஒருவர் பார்ப்பன எதிர்ப்பாளர் என்றால் அவருக்கும் அதுவே ஆயுதம். ஒருவர் இந்து விரோதி என்றால் அவருக்கும் ஈழ ரத்தமே முக்கியமான கருத்துக் கருவி. ஒவ்வொருவரும் அதை ஏந்தி தங்கள் எதிரிகளை தேடி அலைகிறார்கள். நான் நான் என்கிறார்கள். இங்கே நடந்து கொண்டிருப்பது இதுதான்.

இந்திய தேசத்தின் மனிதாபிமான சாரத்தை தட்டி எழுப்பிக் குரல்கொடுக்க வைக்க வேண்டிய நேரத்தில் இந்திய எதிர்ப்புக்குரல்களை எழுப்புவதில் உள்ள அபத்தத்தை எவரும் உணர்வதில்லை. அது எத்தனை பெரிய ஆயுதத்தை எதிரிக்கு



வீசிக்கொடுப்பது என்று உணராத கண்மூடித்தனமான உணர்ச்சிகர அரசியல். அதை வெளிப்படுத்தும் மிகையான நாடகத்தனம். வரலாற்றின் இந்த தருணத்தில் தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்வது என்றே ஒவ்வொருவரும் சிந்திக்கிறார்கள்.

இன்று ஈழ அவலம் தமிழகத்தில் உருவாக்கும் உணர்வெழுச்சி கூட வெறும் இந்திய எதிர்ப்பு கோஷங்களாக இந்திய அளவில் ஊடகங்களால் முன்வைக்கப்படுகிறது. அந்த சித்திரத்தை உருவாக்குவதற்கு யாரை முன்னிறுத்த வேண்டுமோ அவர்களுக்கு மட்டும் அதிக விளம்பரத்தைக் கொடுத்து அவர்கள் குரலை தமிழர் குரலாக ஆக்குகின்றன ஊடகங்கள். அந்த மேடையில் நம் அரசியல் நடிகர்கள் ஆடுகிறார்கள். ஆகவே இந்திய அளவில் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகக் கூட இதைக் கொண்டுசெல்ல நம்மால் முடியவில்லை.

வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு அப்பால் சென்று இந்த தருணத்தை தன் கையில் எடுத்து மேலே செல்லும் ஒரு அரசியல் அறிஞன் நமக்கு இல்லை. அத்தகைய திராணிகொண்ட அரசியல்வாதிகள், ராஜதந்திரிகள் அன்றி பிறர் வாயே திறக்காமலிருக்க வேண்டிய தருணம் இது. சொற்கள் ஒவ்வொன்றும் கவனமாக வெளிப்பட வேண்டிய நேரம்.

ஆனால் நாம் கொந்தளிக்கிறோம். என்னென்ன அபத்த நாடகங்களைப் போடமுடியுமோ அதையெல்லாம் போடுகிறோம். நம் அபத்த ஆட்டத்துக்கு விலையாக மனித உயிர்கள் அழிகின்றன.

இந்த ஆட்டத்தின் எதிர்நிலையில் செயலற்று, சுயவெறுப்பின் உச்சியில் நின்றுகொண்டு, தன்னைத் தானே காறி உமிழ்ந்து கொண்டு, மௌனம் பாவிப்பதே நுண்ணுணர்வும் நேர்மையும் கொண்ட ஒருவர் இப்போது செய்யக்கூடியதாக இருக்கிறது. எழுதினால் நமது பாவனைகளையும் நாடகங்களையும் பற்றி மட்டுமே எழுத வேண்டும்.

சென்ற காலத்துப் பிழைகள் ஒவ்வொன்றும் கண்முன் தெரிகின்றன. ஆயுதங்களை விடப் பெரிய ஆயுதம் கருத்து என்ற உண்மை. வரலாற்றுப் பிழைகள் ஒன்றுடன் ஒன்று திரண்டு பெரிய பாறைபோல தெரியும்போது நம்பிக்கை கொள்ள ஏதும் எஞ்சவும் இல்லை.

# விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை

## நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பார்வைக்கு விலைப் பட்டியல்களை காட்சிப்படுத்தத் தவறும் வர்த்தகர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிககை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பல்பொருள் அங்காடிகள் (சுப்பர் மார்க்கெட்), பேக்கரிகள், உணவகங்கள், அழகுசாதன நிலையங்கள், வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் மற்றும் ஏனைய விற்பனை நிலையங்களில் பொருட்களின் விலைப் பட்டியல்கள் பொதுமக்களின் காட்சிக்கு வைக்கப்படாமல் இருந்தால் நுகர்வோர் அதிகார சபையிடம் பொதுமக்கள் முறையிடலாமென அச்சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் இது குறித்து கூறுகையில், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் எல்லா நேரங்களிலும் பொருட்களின் விலைகள் காட்சிக்கு வைக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் வசதிக்காகவும் வெளிப்படைத் தன்மையை பேணுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் விற்பனை செய்யப்படும் அனைத்துப் பொருட்களினதும் விலைகளை விற்பனையாளர்கள் காட்சிபடுத்துவது அவசியமாகும். இதற்கிணங்க அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால், அது சட்டமீறலாக அமைகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் அமுலில் உள்ளதை அறியாமல் அல்லது அச்சட்டங்களை புறக்கணிப்பதன் காரணமாக, பொருட்களின் விலைகளை நுகர்வோருக்கு காட்சிப்படுத்தாமல் விற்பனையாளர்கள் சிலர் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் பொருட்களை காட்சிப்படுத்தாமை தொடர்பாக மாதாந்தம் சோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் கடந்த மாத சோதனை நடவடிக்கையின் போது மட்டும் 4000 பேர் இவ்வாறு பொருட்களின் விலைப் பட்டியல்கள் இல்லாமல் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாகவும் மரசூக் மேலும் தெரிவித்தார். இத்தகைய முற்றுகை நடவடிக்கை தொடர்வதாகவும் அவர் தெரிவிததார்.

# தொடரும் போராட்டம்

(கொழும்பு)

மாலபே தனியார் பல்கலை கழகம் மூடப்படும் வரை தாம் மேற்கொண்டு வரும் போராட்டங்கள் தொடரும் என அனைதது பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைத்து பல்கலைகழக மாணவ ஒன்றிய இணைப்பாளர் சஞ்சீவ பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்ட நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டு குழுவையும் இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் 6 இல் ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி இடம்பெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் முதல் ஏற்றுக் கொள்ளப்படுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுவதாக ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் பி.விஜேவீர தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் 16 வயதை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியும். தாம் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். இது தொடர்பாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.



# ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுதலையானார் மேர்வின்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேர்வின் சில்வாவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

ஊடகங்களில் வெளியான தகவல்கள் பிழையானவை எனவும், அவ்வாறான கருததுக்களை தாம் வெளியிடவில்லை எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்த விளக்கத்தை பரிசீலனை செய்த மத்திய செயற்குழு அமைச்சர் குற்றமற்றவர் என தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் அனைத்துமே உண்மையில்லை என அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

# மின்சாரக் கட்டணங்களை வசூலித்தோர் கைதாகினர்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் மின்சார சபையின் ஊழியரகள் எனத், தம்மை அடையாளப் படுத்திக்கொண்டு மின்சாரப் பட்டியல் கட்டணங்களை வசூலித்த இரண்டு சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

செட்டிக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தப்பட்டபோது அவர் களை யூன் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

செட்டிக்குளம் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கணினி மயப்படுத்தப்பட்டு வரும் வட, கிழக்கின் அரச நிறுவனங்கள்

(கொழும்பு)

வடகிழக்கின் அரச நிறுவனங்கள் யாவும் கணினி மயப்படுத்தப்படுவதுடன், அரச வலையமைப்பு செயற்திட்டத்திற்கு இணைவாக இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதோடு குறித்த இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தகவல்களை திரட்டும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக இலங்கை தகவல் மற்றும் தொலைத் தொடர்பு முகவர் நிலையம் தெரிவித்துளளது.

அரச நிறுவனங்களை தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்தும் அரசதிட்டத்தின் கீழ் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முலைத்தீவு போனற மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட 75 அரச நிறுவனங்களில் தகவலகள் திரட்டப்பட்டு வருவதாக தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் அமைப்பு தெரிவித்துளளது.

குறித்த நிறுவனங்களை கணினிமயப்படுத்தல், இணைய மற்றும் தொலைநகல் வசதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இதன் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதுவரை 475 அரச நிறுவனங்களுக்கு இவ் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

# பட்டப் பின் படிப்பிற்காக ஜப்பான் புலமைப் பரிசில்

(கொழும்பு

அரச அதிகாரிகளுக்கு பட்டப் பின் படிப்பை தொடர்வதற்கான புலமைப்பரிசினை வழங்க ஜப்பான் அரசாங்கம் முன்வந்துள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் இதற்கான வசதியை வழங்குகிறது. இதற்காக 340 கோடி ரூபா செலவிடப்படும்.

இலங்கையின் மனிதவள அபிவிருத்திக்குத் தேவையான தனிநபர், மற்றும் நிறுவன வசதிகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

முதல் கட்டமாக 15 அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

2014 ஆம் ஆண்டுவரை அமுலாகும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் 60 அரச அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கம் 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் மாணவர்களின் பட்டப்பின் படிப்புக்காக நிதியுதவிகள் வழங்கு கிறது.

இலங்கையைச் சேர்ந்த 30 மாணவர்கள் ஜப்பான் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கிறார்கள்

# வற்றாப்பளை கண்ணகிக்கு விசேட பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி பொங்கல் விழாவை முன்னிட்டு விசேட பஸ் சேவைகளை நடத்த இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ள வைகாசி பொங்கல் விழாவை முன்னிட்டு நாளை தொடக்கம் நான்காம் திகதி வரை விசேட பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளதாக வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ ஹர் தெரிவித்தார்.

பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு ஏதுவாக யூன் ஐந்தாம் ஆறாம் திகதிகளில் பஸ் சேவைகள் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க வழிபாட்டுத் தலமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி பொங்கல் விழா எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பயங்கரவாதத்திற்கு துணை

## குற்றஞ்சாட்டும் ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு).

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் பயங்கரவாதத்திற்குத் துணை போவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாதத்தை தோற்கடித்த நாடொன்றின் மீது பிரித்தானியா தேவையற்ற அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு எதிரான ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு எதிராக ஒட்டுமொத்த நாடே அணி திரள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மீண்டும் பயங்கரவாதத்திற்கு உயிரூட்டக் கூடிய வகையிலான முயற்சிகளை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேற்கொண்டு வருகின்றார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அண்மையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் வெளியிட்டிருந்த கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் சோபித தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

39) சென்ற வருடம் இந்தியாவுக்கு கப்பல் மூலம் சென்றானாயினும் இவ்வருடம் ..................இந்தியாவுக்குச் சென்றான்.
(பஸ்வண்டி மூலம், புகைவண்டி மூலம், விமானம் மூலம்)


40) எனது உடற்பயிற்சிக்கு நடப்பதற்கு ......................................................மிகவும் உகந்தது.
( காலைவேளை, மதியவேளை, நடுஇரவு வேளை)




41) O X இற்கு 70 கிலோமீற்றரைக் குறிக்கின்றது. BE கோடு காட்டும் தூரம் எவ்வளவு?
(.......................................................................................)

42) AF இற்குக் காட்டும் தூரம் எவ்வளவு? (.......................................................................................)

43)




இவ் எண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக.
(.......................................................................................)

44) தரப்பட்ட எண்ணை (வினா 43 இல்) வலயங்களாகப் பிரித்து எழுதுக.
(.......................................................................................)

45) 5, 1, 4, 9, 8 இவ் எண்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய எண்ணை உருவாக்குக.
(.......................................................................................)

46) வினா 45 பெறப்பட்ட எண்ணை வலயங்களாகப் பிரித்து எழுதுக.
(.......................................................................................)

47) புகைவண்டியை விட வேகமாகப் பஸ்வண்டி பயணம் செய்யும். பஸ் வண்டி பயணம் செய்வது மோட்டார் சைக்கிளை விட மெதுவாக எனின், வேகமாகப் பயணம் செல்லும் வாகனம் எது?
(.......................................................................................)

48) சாந்தி வடதிசைக்கு முகம் நோக்கி நின்று கொண்டிருந்தபோது வலது கைப்பக்கமாக அவளுடைய நிழல் விழுந்திருந்தது. அவள் நின்று கொண்டிருந்தது (மாலை, காலை) வேளை ஆகும். சரியான விடையின் கீழ் கோடிடுக.

49) □ + □ + □ = ● + ●

● = 15, □ = □ எனின் □ இன் பெறுமதி யாது?

50) தாயின் வயது மகளின் வயதின் 5 மடங்கு. மகளின் வயது அவளது தமையனின் வயதிலும் 4 குறைவு. தமையனின் வயது 10 எனின், தாயின் வயது என்ன?
(.......................................................................................)





T.S. சுகுமாரன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 76



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.**

முக்கனிக்குள் அது ஒன்றாம் - அது
முற்றத்து வேரிலும் காய்த்துப் பழுக்கும்
மிக்க இனிது கண்டீர் - அதன்
மேலெல்லாம் முட்கள் நிறைந்து கிடக்கும்.

01) இப்பாடலில் குறிப்பிடும் பழம் எது? (.......................................................................................)

02) தேனீர், வழக்கம், சூரியன் இவற்றில் எழுத்துப் பிழையான சொல் எது?
(.......................................................................................)

03) இப்பாடலில் இடம்பெற்ற எதிர்ச்சொற்கள் தருக.
(.......................................................................................)

04) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.
1) முக்கனி ........................................ 2) மேலெல்லாம் ........................................

05) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.
1) காய்த்து + பழுக்கும் ........................................ 2) நிறைந்து + இருக்கும் ........................................

06) உமா சொன்னாள் இக்கவிதையின் வரிகள் யாவும் மெல்லினத்தில் ஆரம்பிக்கின்றன என்று அதனை நீர் ஆமோதிப்பீர் ஆயின் "ஆம்" எனவும் மறுப்பீர் ஆயின் "இல்லை" எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.
(.......................................................................................)

07) பின்வரும் எழுத்துக்களை உயிர்எழுத்து, மெய் எழுத்தாகப் பிரித்து எழுதுக.
உ-ம் கி = க் + இ 1) மு = ........................ 2) மி =........................ 3) மே =........................

08) நிலத்திலிருந்து தண்டுகளுக்கு நீரைப் பெற்றுத்தரும் தாவரங்களின் அங்கம் யாது?
(.......................................................................................)

09) ஒரு தாவரம் ஒன்றில் எப்பொழுதும் இருக்க வேண்டியது (பூ, இலை, காய், வேர்)
(.......................................................................................)

10) மேலே தரப்பட்ட கனி (தனிப்பழம், கூட்டுப்பழம், திரள் பழம்) ஆகும்.
(.......................................................................................)

11) கீழே தரப்பட்ட உருவில் தரப்பட்ட எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கும் முன்னால் பிடித்துப் பார்த்தால் அதே ஒழுங்கில் தெரியும் எழுத்துக்கள் எவை? புள்ளிக்கோட்டில் எழுதுக.
ட ப ம O ல A (.......................................................................................)

**குறித்த ஒரு மீன் கடையில் பின்வரும் உருக்களினால் காட்டப்பட்டுள்ளவாறு நிறைகள் கொண்ட மீன் குஞ்சுகள் இருந்தன. மீன் கடைக்காரன் மீன்களை வெட்டாது முழு மீன்களாகவே கொடுப்பானாகில்,**



12) 29 கிலோகிராம் மீன்கள் கிடைக்குமாறு எடுக்கக்கூடிய குறைந்த மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

13) 25 கிலோகிராம் மீன்கள் கிடைக்குமாறு எடுக்கக்கூடிய குறைந்த மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

14) 36 கிலோகிராம் மீன்கள் கிடைக்குமாறு அவன் பெறும் குறைந்த மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

15) 11 கிலோகிராம் மீன்கள் கிடைக்குமாறு அவன் பெறும் குறைந்த மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

**தரப்பட்ட மரபு வழக்குச் சொற்றொடரின் பொருளை விளக்கும் விடைகள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றைத் தொடர்புபடுத்தும் எழுத்தை அடைப்புக்குள் எழுதுக.**

16) வேலி பயிரை மேய்ந்தாற் போல் (.......................)
17) பசுமரத்தாணி போல் (.......................)
18) குரங்கின் கை பூமாலை போல (.......................)

A. வெளிப்படையாக அமைந்திருத்தல்
B. மிகவும் அருமையாக நடைபெறல்
C. நம்பியோரே தீங்கிழைத்தல்
D. மிகவும் சுலபமாக இருத்தல்
E. அறியாதாரிடம் பொறுப்பளித்தல்

19) என்னிடம் 12 ரூபா இருந்தது. எனது தம்பியிடம் நான் 4 ரூபா கொடுத்தால் இருவரிடமும் இருக்கும் பணம் சமனாகும். எனது தம்பியிடம் முன்னர் இருந்த பணம் எவ்வளவு?
(..........................................................................................)

20) ஒரு செங்கல்லின் நிறை ஒரு கிலோகிராமும் 500 கிராம் உம் ஆகும். இவ்வாறாக 8 செங்கற்களைச் சுமக்கும் ஒருவன் எவ்வளவு kg ஐச் சுமப்பான்?
(..........................................................................................)

**தமிழ்க் கலவன் பாடசாலையில் 1999 ஆம் ஆண்டில் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் அட்டவணை ஒன்றில் கீழே தரப்பட்டுள்ளது.**

அட்டவணை - 1

| பரீட்சை | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | தேறிய மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சை | 100 | 40 |
| க.பொ.த. (சா/த) பரீட்சை | 50 | 30 |
| க.பொ.த. (உ/த) பரீட்சை | 50 | 20 |

21) க.பொ.த.(சா/த) பரீட்சை என்பதால் நீர் விளங்குவது யாது? (அவைகளுக்குரிய விரிவான வடிவில் தருக. உ-ம் மு.ப. - முற்பகல் போன்று)
(..........................................................................................)

22) க.பொ.த.(உ/த) பரீட்சை என்பதனை விரிவான வடிவில் தருக.
(..........................................................................................)

23) இம்முறை பரீட்சைகளிலும் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

24) இம்மூன்று பரீட்சைகளிலும் தேறாத (சித்தியடையாத) மாணவர்களின் எண்ணிக்கை யாது?
(..........................................................................................)

25) எப்பரீட்சை மிக நல்ல பெறுபேறு கிடைத்துள்ளதென நீர் கருதுகின்றீர்?
(..........................................................................................)

**பின்வரும் அட்டவணையில் அப்பாடசாலையில் 4 வருடங்களில் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையாகும்.**



அட்டவணை - 2


| வருடம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | தேறாத மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1996 | 54 | 40 |
| 1997 | 50 | 34 |
| 1998 | 52 | 52 |
| 1999 | 50 | 30 |

26) மேலே உள்ள அட்டவணைக்கு அமைய அந்த 4 வருடங்களிலும் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையின் பெறுபேறுகள் பற்றி உமக்கு யாது விளங்குகிறது?
(..........................................................................................)

27) நீர் அவ்வாறான வினா 26 இற்கு விடை அளித்ததன் காரணம் யாது?
(..........................................................................................)

28) மேலே தரப்பட்ட அட்டவணையில் ஆண்டு 5 இற்குரிய மாணவர்கள் பற்றிய விபரத்திற்கு (அட்டவணை 2 இற்கும், அட்டவணை 1 இற்கும்) இடையில் தரப்பட்ட தகவல்களுக்குரிய வித்தியாசம் யாது?
(..........................................................................................)

29) அட்டவணை 2 ஐப் பயன்படுத்தி சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் வருடங்களுக்கும் இடையிலான தொடர்பை படவரைபில் காட்டுக.




30) நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வடகிழக்குத் திசையை நோக்கி 10 மீற்றர் சென்ற பின் அங்கிருந்து வடமேற்கு நோக்கி 10 மீற்றர் சென்ற பின் நின்றேன். நான் தற்போது நிற்கும் இடத்திற்கு வீடு எத்திசையில். அமைந்துள்ளது.
(..........................................................................................)

**கூட்டிலுள்ள இரு எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

31) 80 - [30 - 10] = 4  a) 80 - 30  b) 25 - 5  c) 30 + 10  d) 30 - 10

32) 16 + [10 + 8] = 34  a) 16 + 10  b) 20 - 6  c) 9 x 2  d) 16 - 4

**எமது சூழலில் பல்லின உயிரினங்கள் வாழ்கின்றன. அவைகளின் உடல் அமைவுக்கு ஏற்ப இவ் உயிரினங்கள் ஒன்றோடொன்று வேறுபடுகின்றது. நீரில் வாழ்வனவும் நிலத்தில் வாழ்வனவாகவும், நீரிலும் நிலத்திலும் வாழ்வனவாகவும் காணப்படுகின்றன.**

33) நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
(..........................................................................................)

34) எமது சூழலில் வாழும் பூச்சிகள் இரண்டின் பெயர்களைத் தருக.
(..........................................................................................)

35) நுளம்பு எங்கே முட்டை இடும்? (..........................................................................................)

36) அம்மா காலை உணவிற்காக இடியப்பத்திற்குப் பதிலாக ..............................................................செய்தார்.
(மிட்டாய், கேக், அப்பம்)

37) கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்ல பஸ் வண்டி இல்லாமையால் நாம் ..................................................சென்றோம்.
(நடந்து, மாட்டுவண்டியில், புகைவண்டி மூலம்)

38) ஆற்றைக் கடப்பதற்கு ஒரு பாலம் இல்லாமையினால் நாங்கள் .........................................மறு கரைக்குச் சென்றோம்.
(படகு மூலம், நடந்து, சைக்கிள்)

# யாழிலிருந்து வவுனியா சென்ற பேருந்தில் 5 ஆயிரத்தை பறிகொடுத்தார் பெண்மணி

(பிரமிலன்-சிகரம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற பேருந்து ஒன்றில் பயணம் செய்த 50 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் 5 ஆயிரம் ரூபா பணத்தினைப் பறி கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி நேற்று காலை புறப்பட்டுச் சென்ற பேருந்திலேயே இந்தப் பெண்மணி தன்னுடைய பணத்தினை இழந்துள்ளார்.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் பேருந்து நின்ற போது பணத்தினைப் பறி கொடுத்த இந்தப் பெண்மணி பேருந்தில் இருந்து இறங்கி ஆலயத்திற்குச் சென்றதாகவும், திரும்பி வந்து பார்த்த போது அவரது கைப்பை திறக்கப்பட்டு பணம் திருடப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில நான் பஸ்சில் ஏறின போது என்னோட மூன்று பொம்பிளைப் பிள்ளைகள் ஏறி என்னோட கதைச்சுக்கொண்டு வந்தவை... அந்தப் பிள்ளைகளிடமே நான் என்னுடைய பையைப் பாத்திருக்கச் சொல்லி விட்டுப் பிள்ளையாரிட்டை போட்டு வந்து பஸ்சில ஏறிய போது அந்தப் பெண் பிள்ளைகளைக் காணவில்லை. அதோட என்னுடைய பயணப்பையும் (bag) திறந்திருந்தது அந்தப் பிள்ளைகளே நான் இறங்கிச் சென்றபோது பணத்தை திருடிச் சென்றுள்ளனர் எனப் பணத்தினைப் பறிகொடுத்த பெண்மணி கவலையுடன் தெரிவித்தார்.

மன்னார் நானாட்டானில் தோட்டம் செய்து வரும் இவர், தோட்டத்தில் நடுவதற்கு வெங்காயம் வாங்குவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் ஒருவரிடம் இந்த 5 ஆயிரம் ரூபா பணத்தினைக் கடனாக வாங்கிச் சென்றதாகவும் அந்தப் பெண்மணி மேலும் குறிப்பிட்டார்.

# போதைப்பொருட்களை விற்ற வர்த்தகர்களுக்கு அபராதம்

(கிரு, பக்-சிகரம்)

யாழ்.நீதிமன்றத்தில் 21வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு போதை பொருள் விற்பனை செய்தமை தொடர்பான வழக்குகளே அதிகளவில் பதிவு செய்யப்படுகிறது.

21வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகைத்தல் பாவனை பொருட்களை விற்பனை செய்தமைக்காக வர்த்தகர்கள் மூவருக்கு 5 ஆயிரம் ரூபா ரூபா தண்டப்பணமும், ஆறு கடை உரிமையாளர்களுக்கு 4ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு வேண்டப்பட்டதுடன், குறைந்த அளவில் போதையைக் கொடுக்கும் பொருட்களினை வழங்கிய இருவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

அத்துடன், சாரதி அனுமதி பத்திரம்,காப்புறுதிப் பத்திரம், வரிபத்திரம் இன்றி வாகனத்தை செலுத்தியமைக்காக 3 நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலைக்கவசம் இல்லாமல் மோட்டார்வாகனத்தைச் செலுத்திய ஒருவருக்கு 500ரூபா தண்டப்பணமும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வேகமாக ஓட்டிச்சென்று வேறு ஒரு மோட்டார் வாகனத்துடன் மோதியவருக்கு 3ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் செலுத்தவேண்டும் என யாழ். நீதிமன்ற நீதவான் கணேசராசா தீர்ப்பு வழங்கினார்.

வீதியில் செல்வோருக்கு இடையூறாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார்வாகனத்தைச் செலுத்தியவருக்கு 4ஆயிரம் ரூபா தண்டப்பணமும், மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணமும், சாரதி அனுமதி பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், தலைக்கவசம் ஆகியன இன்றி வாகனத்தைச் செலுத்தியவருக்கு 9ஆயிரம் ரூபா தண்டப்பணமும், மது போதையில் சாரதி அனுமதி பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், தலைக்கவசம் ஆகியன இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆசனபட்டி இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 1000ரூபாவும், வேகமாக ஓட்டிச்சென்று ஒருவரை காயப்படுத்தியமைக்காக 10000ரூபா பெறுமதியான ஒரு ஆட்பிணையிலும் செல்வதற்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. (எஸ்)

# யாழ்ப்பாண கலைஞர்களுக்கு தெரு நாடக களப்பயிற்சி



(சாந்தன் - சிகரம்)

நாடகத்துறையில் ஆர்வமுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர் களுக்கு இந்தியாவில் தெரு வெளி நாடகங்களிற்கு களப்பயிற்சிகளை வழங்கி வருகின்ற பிரளயன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 'தெரு நாடகம்' தொடர்பான களப் பயிற்சிகளை வழங்கினார்.

திருநெல்வேலி செயற்திட்ட அரங்கில் காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெற்ற இந்தக் களப்பயிற்சியில் நாடக ஆர்வலர்கள், நாடக ஆசிரியர்கள், மாணவர்கள் என 30இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

'பிரளயன்' என்ற பெயரால் அனைவராலும் அறியப்பட்ட சண்முகசுந்தரம் சந்திரசேகரம்



இந்தியாவில் 'கலைக்குழு' என்ற நிறுவனத்தின் தலைவராக இருப்பதுடன், உலக நாயகன் கமலஹாசனின் நடிப்பில் வெளிவந்த விருமாண்டி, அன்பே சிவம் போன்ற படங்களில் இடம்பெறும் தெரு நாடகக் காட்சியினை நெறிப்படுத்தியவர் ஆவார்.

இந்தக் களப்பயிற்சிப் பட்டறையில் யாழ் பல்கலைக் கழகத்தின் நாடகத்துறை முன்னாள் பேராசிரியர் குழந்தை வி.சண்முகலிங்கம் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

# நித்தர்புலம் பெரியதம்பிரானுக்கு எண்ணெய்க்காப்பு

(சிகரம்)

சாவகச்சேரி மறவன்புலோ மத்தி நித்தர்புலம் (நீலசோதி) பெரிய தம்பிரான் ஆலயத்தின் எண்ணெய்க்காப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 6மணி வரை நடை பெற்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை கர்மா ஆரம்ப நிகழ்வுகளும், நேற்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை தைலாப்பியாசம் எனக் கூறப்படும் எண்ணெய்க் காப்பு நிகழ்வும் நடைபெற்றதுடன், இன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை குடமுழுக்கு நடைபெறும்.

தொடர்ந்து 12நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெரியதம்பிரானுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதுடன், இந்த ஆலயத்தின் பண்டையகால முறைப்படி பெரிய வீட்டிலிருந்து பண்டம் எடுத்து வந்து வழி வெட்டுதலுடன் விழாக்காலப் பூசைகள் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# பதிவிருக்கப் பெட்டகம்

எதைக் கேட்டாலும் மறுப்புக்
கூறுகிறீர்களே என்றாள் மனைவி
ஆமாம் என்றால் அவள் கூறியது
உண்மையாகி விடுமே என்று
இல்லையே என்றேன் நான்

– பாரதிராமன்

நாற்று நடாமல்
நீர் வேண்டாமல்
மனமாம் – பச்சை
வயல் நடுவே
முளைத்திருக்கிறது
மீசையுடன் மிரட்டும்
பற்களுடன்
ஒரு பொம்மை.

– கலாப்ரியா

அவனைப் பள்ளியில் சேர்க்கு மட்டும்
ஓயாமல் கேள்வி கேட்பான்
பதில் தர நான் தவிப்பேன்.
அவனைப் பள்ளியில் சேர்த்த பின்னால்
ஓய்ந்தால் கேள்வி கேட்கிறேன்
பதில் தர அவன் தவிக்கிறான்.

– மீரா

தூணிலும்
இருப்பானாம்
துரும்பிலும்
இருப்பானாம்
மசூதியில்
மட்டும்
கூடாதோ

– சம்பத்

பரமண்டலத்திலிருக்கும்
பரம பிதாவே
உன் நாமம் ரட்சிக்கப்படுவதாகுக
நேற்று நான் தின்ற கோழி
உம் அருகில் வந்திருந்தால்
மீண்டும் உயிர்ப்பித்துத் தாரும்
கறி நன்றாக இருந்தது
ஆமென்.

– தேவகுமார்

குயிலாய் பாடவும்
மயிலாய் ஆடவும்
மானாய் ஓடவும்
முடியாத மனிதன்
யோசித்து பின்
கற்றான்
சூண்டு செய்யும் விதம்.

– மோகனரங்கன்

யார் மீதும் மோதிக்
கொள்ளாதிருக்கும் கவனத்துடன்
யாரும் நடப்பதாகத் தெரியவில்லை
ஆனாலும்
யாரும் யார் மீதும் பெரும்பாலும்
மோதிக்
கொள்வதில்லை.

– பா.வெங்கடேசன்

எப்போது
வேண்டுமானாலும்
ஆபத்து
நேர்ந்துவிடக் கூடியதை
மௌனமாய்
உணர்த்தும்
ரயில் பெட்டியின்
அபாயச் சங்கிலி

– யுகபாரதி

ஜாக்கிரதையாய் போய்வா
எங்கும் ஆட்கள் நெரிசல்
உன்னைத் தள்ளி உன்மேல்
நடக்கப் போகிறார் பார்த்துக்கொள்.

– ஞானக்கூத்தன்

தாகமும் தீராமல்
தண்ணீரும் குறையாமல்
நீல சீசாவில்
அலை வீச அலை வீச
சாய்த்துச் சாய்த்து
பூமி வாய் குடிக்கும் கடல்

– தேவதேவன்

சத்தியவானை
சாவித்திரி காப்பாற்றினாள்
'என்னால் தானே
இன்னும் நீ உயிரோடு...'
என்று
கேட்டுக் கேட்டு
கொல்ல.

– அஞ்ஞானி

ஊரின் எல்லையில்
ஓயாத பேராறு
எல்லாத் தெருவிலும்
ஏகப்பட்ட புழுதி
நினைக்க ஆறு
நடக்க நடுத்தெரு

– கல்யாண்ஜி

கடவுளைக் கண்டேன்
எதையும் கேட்கத் தோன்றவில்லை
அவரும் புன்னகைத்துப்
போய் விட்டார்
ஆயினும்
மனதிலே ஒரு நிம்மதி.

– ஆத்மாநாம்

பசிக்கடியில்
பலநாள் செத்து
நேற்று 12.30க்குத்
தண்டவாளத்தில் வாழ்ந்தாள்
அந்தப் பிச்சைக்காரி
நாங்கள்
பார்த்துச்
சிரித்துவிட்டு
மேட்னிக்குப் போனோம்.

– தமிழவன்

எலும்பை முறிப்பதுபோல்
மடமடவென மச்சுப்
பலகையை அவர்கள்
பிரிக்கத் தொடங்கிய
பின்னும்
சுற்றிச் சுற்றி வந்தது அந்த
கூடுகட்டிக் குஞ்சு பொரித்த
தவிட்டுக்குருவி
என்னைப் போல.

– ரவி சுப்ரமணியன்


"உழைத்தால் உயரலாம்
உழைத்தால் உயரலாம்"
அதுசரி,
யார் உழைத்தால்
யார் உயரலாம்?

– நீலமணி

யோகிபோல் ஒடுங்கி நிற்கும்
நேரமொன்றில்
பாகன் அமர்ந்து செல்லும்
யானை போல் என் தேகம்
நான் முன்செல்லத் தான் பின்வர.

– நகுலன்

# பிரதமர் பதவியில் மகிழ்ச்சியாக உள்ளேன்



(சென்னை)

தறபோது வகிக்கும் (பிரதமர்) பதவியில் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.


தற்போதைய குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீலின் பதவிக்காலம் வரும் ஜூலை 24 ஆம் திகதியன்று முடிவடைகிறது. அதற்கு மறுநாள் புதிய குடியரசுத் தலைவர் பொறுப்பேற்க வேண்டும். அடுத்த குடியரசுத் தலைவருக்கான தேர்தல் செயற்பாடுகள் இந்த மாதம் இரண்டாவது வாரத்தில் தொடங்கும் என்று தெரிகிறது.

காங்கிரஸ் சார்பாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அல்லது தற்போதைய குடியரசுத் துணைத் தலைவர் ஹமீது அன்சாரி நிறுத்தப்படலாம் என்று யூகங்கள் வெளியாயின. மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆதரவுடன் தேசியவாத காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான பி.ஏ.சங்மா குடியரசு தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் சார்பாக பிரதமர் மன்மோகன்சிங் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கடந்த வாரம் செய்திகள் வெளியானது.

வெளிநாட்டு சுற்றுப் பயணத்திலிருக்கும் பிரதமர் மியான்மரிலிருந்து நாடு திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது இது குறித்து கேள்வி எழுப்பப் பட்டது. அதற்கு விடையளித்த மன்மோகன் சிங் இப்போது இருக்கும் (பிரதமர்) பதவியில் தாம் மகிழ்வுடன் இருப்பதாகப் பதில் அளித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்




# வாபஸ் எச்சரிக்கையை வாபஸ் வாங்கினார்

(சென்னை))



பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய தி.மு.க. தலைவர் கருணாநிதி, விலை உயர்வு திரும்ப பெறாவிட்டால் மத்திய அரசுக்கு தி.மு.க. கொடுத்துவரும் ஆதரவை வாபஸ பெறுவோம் என்று செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். தற்போது தான் அவ்வாறு கூறவில்லை என்றும், பத்திரிக்கைகள் தவறாக திரித்து கூறியுள்ளன என்று கூறியுள்ளார்.

மக்கள் பிரச்சினைக்காக 2003 இல் வாஜ்பாய் தலைமையிலான அரசிலிருந்து தி.மு.க. விலகியதை தான் குறிப்பிட்டு கூறியதாகவும், மத்திய அரசில் கசப்பான உணர்வுகளோடு தொடர்வோம் என்றும், குடியரசுத் தலைவர் தேர்தல் நடக்க இருக்கும் நேரத்தில் மத்திய அரசிற்கு சங்கடத்தை கொடுக்க விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

# மன்னிப்புக் கேட்கவில்லை ஷாருக்கான் அடித்தார் பல்டி

(மும்பை)

மும்பை ஸ்டேடியத்தில் நடந்த சம்பவத்துக்கு, நான் மன்னிப்புக் கேட்டதாக வெளியான தகவலில் உண்மையில்லை. நான் மன்னிப்புக் கேட்கவில்லை. என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி உரிமையாளர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின்போது, மும்பை வான்கடே ஸடேடியத்தில், நடிகரும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளருமான ஷாருக்கான் தகராறில் ஈடுபட்டார். இதையடுத்து, மும்பை ஸ்டேடியத்துக்குள் நுழைய ஷாருக்கானுக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், ஐ.பி.எல். இறுதிப் போட்டியில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடியபோது, மும்பை ஸ்டேடிய சம்பவத்துக்கு ஷாருககான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாக செய்திகள் வெளியாகின.

இதை ஷாருக்கான் மறுத்துள்ளார். மும்பையில் அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது, ஐ.பி.எல். போட்டியில் நான் வென்றே ஆக வேண்டும் என்று கருதிய போதெல்லாம், இதற்காக நான் போராட வேண்டும் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். இதை சவாலாக எடுத்துக் கொண்டேன். என்னால் இது முடியும் என்று ஒவ்வொரு வரும் என் மீது நம்பிக்கை வை[illegible]தனர்.

இந்த வெற்றி எனது வாழ்வில் மிகப்பெரிய பாடமாகும். மும்பை ஸ்டேடியத்தில் நடந்த சம்பவத்துக்கு, நான் மன்னிப்புக் கேட்டதாக வெளியான தகவலில் உண்மையில்லை. நான் மன்னிப்புக் கேட்கவில்லை என்றார்.

# ஆயுதக் கொள்வனவை கண்காணிக்க குழு நியமனம்



(புதுடில்லி)

மதத்திய உளதுறை அமைச்சகம் சார்பில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவது தொடர்பான ஒப்பந்தங்களில் முறைகேடு ஏதும நடைபெறாமல் முறையாக நடைபெறுவதற்காக 2 முன்னாள் அதிகாரிகளை கொண்ட குழுவை மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் நியமித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு வரை வாங்கப்படும் ரூபா 10 கோடிக்கும் அதிகமான தொகையிலான பாதுகாப்பு தொடர்பான அனைத்து உபகரணங்களையும் வாங்கும் ஒப்பந்தங்களை கண்காணிக்க முன்னாள் பெட்ரோ கெமிக்கல் துறை செயலாளர் எம்.ராமன் மற்றும் முன்னாள் ஆடிட்டர் ஜெனரல் சுனில் வர்மா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு பிறகு அதிக தொகையில் வாங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் குறித்து உள துறை அமைச்சகத்தால் அதிகாரிகள் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

2009 ஆம் ஆண்டு முதல் ரூ.5000 கோடி மதிப்பிலான 90,000 குண்டு துளைக்காத கவசங்கள் 68,000 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், 16,000 துப்பாக்கிகள், 8 ஹெலிகொப்டர்கள் மற்றும் 118 குறைந்த எடை கொண்ட ஆயுத தாங்கிகள் உளளிட்ட ஆயுதம், வெடி பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளது.

மத்திய சுங்கவரித்துறை கழகத்தின் ஆலோசனையின் பேரில் மத்திய உள்துறை அமைச்சகம் புதிய அதிகாரிகள் குழுவை நியமித்துள்ளது. இவர்கள் மே 16 ஆம் திகதி நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான மாத ஊதியம் ரூபா 26,000 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.




இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் இசையமைப்பாளர் ரகுமான் இருவரும் சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# தந்தையின் பிறந்த நாளுக்குச் செல்ல கனிமொழி நீதிமன்றில் மனுத் தாக்கல்

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த தினத்தையொட்டி சென்னை செல்ல அனுமதி கோரி அக் கட்சியின் எம்.பி கனிமொழி டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கனிமொழி, அந்த வழக்கு விசாரணைக்காக டில்லியில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள[illegible]

இந்நிலையில், அவருடைய தந்தை கருணாநிதியின் பிறந்தநாள் நாளை மறுதினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, சென்னை செல்ல அனுமதி கோரி, டில்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் கனிமொழி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ. ராசாவைத் தமிழக முன்னாள் அமைச்சர் துரை முருகன் டில்லியில் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார்.

# மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்கவுள்ளார் சச்சின்

(புதுடில்லி)

இந்திய கிரிகெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் வரும் நான்காம் திகதி மா்நிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்க உள்ளார்.

39 வயதான சச்சின் டெண்டுல்கர் மேல்சபை உறுப்பினராக கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப் பட்ட அவர், வரும் பதவி ஏற்க இருப்புதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கருடன் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்ட நடிகை ரேகா மற்றும் தொழிலதிபர் அனு அகா ஆகியோர் ஏற்கனவே பதவி ஏற்றுக் கொண்டனர்.

ஐ.பி.எல்.போட்டி தொடரில் சச்சின் கலந்து கொண்டதால் பதவி ஏற்காமல் இருந்தார். இப்போட்டி முடிவடைந்ததை அடுத்து வரும் 4 ஆம் திகதி பதவி ஏற்க இருக்கிறார்.

முன்னதாக, சச்சின் டெண்டுல்கர் மாநிலங்களவை எம்.பி. ஆவதற்கு பலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவரும் கிரிக்கெட்டிற்குத்தான் முன்னுரிமை என்று கூறினார். ஆனால் இதுவும் தனக்கு ஒரு மகுடம் என்ற ரீதியிலும் அவர் பேசியிருந்தார்.

சச்சின் எம்.பி ஆவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தோல்வி அடைந்தது. சச்சின் பதவியேற்கத் தடையில்லை என்று தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

நிறைய நெருக்கமான கிரிக்கெட் தொடர்கள் இருக்கும் நிலையில் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் அவர் பங்கேற்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# சிரியாவின் அரசியல் நடவடிக்கையில் ஐ.நா. கவனம் செலுத்தக் கூடாது - ரஷ்யா

சிரியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பது தொடர்பிலான புதிய நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புப் பேரவை கவனம் செலுத்தக் கூடாது என ரஷ்யா தெரிவித்துள்ளது

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் இராணுவத் தலையீடுகள் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி பின்சுவா ஒலண்டன் எச்சரித்துள்ள நிலையில் ரஷ்யா இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இதன் ஊடாக இராணுவத் தலையீடுகள் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளும் தடை செய்யப்படும் என்பதன் ஓர் அறிகுறியாக ரஷ்யாவின் இந்த அறிவிப்பு உள்ளதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே சிரியா தொடர்பாக ஐ.நா பாதுகாப்புப் பேரவையின் புதிய நடவடிக்கைகளுக்கான அழுத்தத்தை கொடுக்கவுள்ளதாக ஜேர்மனியும் கூறியுள்ளது

ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் சிரியாவுக்கு எதிராக தீர்மானம் கொண்டுவர முற்பட்ட போது ரஷ்யாவும், சீனாவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அத்தீர்மானத்தை தோல்வியடையச் செய்ததுடன், சிரியாவுக்கு தொடர்ந்தும் ஆதரவு `வழங்கி வருகின்றன.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு எதிராக கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இடமபெற்று வரும் கிளர்ச்சிகளில் இதுவரை 9000இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா மதிப்பீடு செய்துள்ளது

அதேவேளை, சிரியாவின் கௌலா நகரில் கொல்லப்பட்ட 108 பேரில் பெரும்பாலானவர்கள் தண்டனை நிறைவேற்றும் பாணியில் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா கண்காணிப்பாளர்கள் தெரிவிதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் வன்முறை; 45 பேர் உயிரிழப்பு




நைஜீரியாவில் இரு பிரிவினரிடையே நேற்று முன்தினம் நடந்த வன்முறையில் 45 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இதில் கிராமத் தலைவர் மற்றும் நான்கு பொலிஸ்காரர்களும் பலியானதாக அந்நாட்டு செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

நைஜீரியாவின் தென்கிழக்குபகுதியில் நிதன் ஒபு மற்றும் இக்பன்யா இரு பிரிவினர்களிடையே வன்முறை ஏற்பட்டதில் வீடுகள் மற்றும் தேவாலயங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. மேலும் அங்குள்ள தலைமை காவல் நிலையமும் இடிக்கப்பட்டது. தரைமட்டமான வீடுகளில் 2 ஆயிரம் பேருக்கு மேல் வசித்து வந்தனர். கலவரத்திற்கு முக்கிய காரணம் இரு மாகாணங்களின் எல்லைப் பிரச்சினையே என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியலை ஆய்வு செய்த ஒபாமா



பாகிஸ்தான் மற்றும் ஏமனில் பதுங்கி இருக்கும் அல் கொய்தா அமைப்பினரில் கொல்லப்பட வேண்டியவர்கள் பட்டியல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இரகசிய ஆய்வு ஒன்றை நடத்தி வருகிறார். அந்த ஆய்வு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் ஒபாமா ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒபாமா தயாரித்து வரும் கொல்லப்பட வேண்டிய அல் கொய்தா அமைப்பினர் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களின் பெயர்களை ஒபாமாவே தீர்மானிப்பதாகவும், அவர்களை எவ்வாறு அருகில் மற்றும் தொலைவில் இருந்து தாக்குதல் நடத்துவது என்பது குறித்தும் ஒபாமா முடிவு செய்திருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒபாமாவின் பார்வையில் உலகின் நிலைப்பாட்டிற்கு அமெரிக்காவே முக்கிய பொறுப்பு வகிப்பதாக அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்துள்ளார். இதுவரை 12 முக்கிய அல் கொய்தா தலைவர்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிகப்பட்டுள்ளது

# இடைக்கால அரசைக் கலைக்குமாறு நேபாள எதிர்க்கட்சிகள் கோரிக்கை



நேபாளத்தில் இப்போது பதவியில் உள்ள மாவோயிஸ்ட் தலைமையிலான இடைக்கால அரசைக் கலைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ராம்பரண் யாதவை எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. நேபாள காங்கிரஸ் சிபிஎன்-யுஎம்எல், ராஷ்ட்ரிய பிரஜாதந்திர கட்சி உள்ளிட்ட 16 கட்சிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.


தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் நாடு முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவை அச்சுறுத்தியுள்ளன. நாட்டில் தேர்தல் நடத்துவதை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும், ஆனால் மாவோயிஸ்ட் தலைமையிலான அரசு தேர்தல் நடத்துவதை ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என்றும் அவை குறிப்பிட்டன.

இது தொடர்பாக கூட்டறிக்கையை கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அளித்தனர். புதிய அரசில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் தேர்தல் நேர்மையானதாகவும், நியாய மானதாகவும் நடைபெறும் என்று நேபாள காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராமசந்திர புதியால் தெரிவித்தார். இடைக்கால அரசைக் கலைத்து அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெறும் வகையிலான அரசை ஏற்படுத்தி பின்னர் தேர்தல் நடத்த வேண்டும். இதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை பயன் படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# விக்கிலீக்ஸ் நிறுவனரை நாடுகடத்த உத்தரவு

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே, அவரது நிறுவனத்தில் பணிபுரியும் இரண்டு பெண்களைப் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் துன்புறுத்தல் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டை விசாரித்தபின் ஜூலியன் அசாஞ்சேயை பிரிட்டனிலிருந்து சுவீடனுக்கு நாடு கடத்த லண்டன் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அசாஞ்சே உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து, இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அசாஞ்சே மேல்முறையீடு செய்தார். தான் சுவீடனுக்கு சென்றால் தனக்கு நீதி கிடைக்காது எனவும் தன் மீதான குற்றச்சாட்டுக்கு எதிராக போராட, தன்னை இங்கிலாந்திலேயே இருக்க அனுமதி அளிக்க வேண்டும் எனவும் தனது மேலமுறையீட்டு மனுவில் கூறியிருந்தார்.



மேலும் தன்மீதுள்ள குற்றாச்சாட்டு பொய் என நிரூபிக்க சட்டப்போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த மேல்முறையீட்டு மனு லண்டன் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த 7 நீதிபதிகள் கொண்ட குழுவில் அவரை நாடு கடத்த வேண்டும் என 5 நீதிபதிகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 2 நீதிபதிகளும் கருத்து தெரிவித்தனர்.


இதனை தொடர்ந்து அவர் சுவீடனுக்கு நாடுகடத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த அசாஞ்சே எங்களது சட்டப்போராட்டம் கடுமையாகத் தொடரும் என்றார்.

# பனிப்பாறையில் பலியான வீரர்கள் தியாகிகளாக அறிவிப்பு



சியாச்சின் மலையில் பனிப்பாறையில் சிக்கி பலியான பாகிஸ்தான் வீரர்கள், தியாகிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் உள்ள சியாச்சின் பனிமலையில் ஜியாரி என்ற இடத்தில், கடந்த மாதம் 7ஆம் திகதி ஆயிரம் மீற்றர் நீளமும், 25 மீற்றருக்கும் அதிகமான அகலமும் கொண்ட பனிப் பாறை சரிந்து, பாகிஸ்தான் வீரர்கள் முகாம் மீது விழுந்தது. இந்தச் சம்பவத்தில் 124 வீரர்கள் உட்பட, 139 பேர் பனிப்பாறைச் சரிவில் புதையுண்டனர். புதையுண்ட வீரர்கள் மீது, 80 அடி உயரத்துக்கு பனித் துகள்கள் குவிந்துள்ளன. மீட்புப் பணிகள் இன்னும் தொடர்கின்றன. 3 வீரர்களின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. புதையுண்டவர்கள் இனியும் உயிர் பிழைத்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதால், அவர்களைத் தியாகிகளாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

# மின்சார அருமையை வெளிப்படுத்த மனித இரத்தத்தில் எரியும் விளக்கு



மனிதர்களின் இரத்தத்தில் எரியும் விளக்கை அமெரிக்க வடிவமைப்பாளர் மைக் தாம்ப்சன் என்பவர் வடிவமைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக் தாம்ப்சன் என்பவர் சற்று வித்தியாசமாக மனித இரத்தத்தில் எரியும் விளக்கை வடிவமைத்துள்ளார்.

அந்த விளக்கினுள் இரசாயனங்களை வைத்துள்ளார். அந்தக் கண்ணாடி விளக்கை எரிய வைக்க அதன் வாய்ப் பகுதியை உடைத்து அந்த துண்டைக் கொண்டு கையைக் கீறி இரத்தத்தை அந்த ரசாயனங்களில் விட வேண்டும்.

இரத்தம் இரசாயனங்களுடன் கலந்த பிறகு விளக்கு நீல நிறத்தில் பிரகாசிக்கிறது. இந்த விளக்கை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும். மக்கள் மின்சாரத்தின் அருமை தெரியாமல் கண்டபடி வீணடிப்பதை உணர்த்தவே இந்த விளக்கை வடிவமைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். மனித உடலில் இருந்து இரத்தம் அதிகளவில் வெளியேறினால் அது எப்படி உயிருக்கு ஆபத்தோ, அதே போன்று தான் மின் சக்தியை அதிகம் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு ஆபத்து என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தனது இணையதளத்தில் மேலும் கூறுகையில், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தும் வகையில் இந்த விளக்கு இருப்பது, விளக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுது மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று மக்களைச் சிந்திக்க வைக்கும்.

அவர்கள் எப்படி அக்கறையின்றி மின்சக்தியை வீணடிக்கிறார்கள் என்பதும் புரியும். சுவிட்சை போட்டால் விளக்கு மின்விசிறி உள்ளிட்ட மின்சாதனங்கள் வேலை செய்வதால் மின்சக்தி எங்கிருந்து வருகிறது என்பதைப் பற்றி மக்கள் சிந்திப்பதே இல்லை என்று கூறியுள்ளார்.

# ஐ.பி.எல். திருவிழா-5

**ஐ.பி.எல்.** இறுதிப் போட்டியின் போது மின்சாரமில்லா இருட்டில் இருந்த போது சில தெருக்கள் தள்ளி இருக்கும் ஒரு வீட்டிலிருந்து பட்டாசுகள் வெடித்தன. முதலில் சென்னை ஜெயித்து விட்டது என்றுதான் நினைத்தேன். ஆனால் மின்சாரம் வந்த போது ஏமாற்றம் காத்திருந்தது. வென்றது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

தேசிய அணிகளுக்குள்ள தேசியவாத வெறியினைப் போல் ஐ.பி.எல்லில் இல்லை. சென்னையில் கொல்கத்தா ஜெயித்தாலும் வெடி போடுவார்கள். அதனால்தான் தேசிய அணிகளின் ஆட்டங்களில் மேட்ச் ஃபிக்சிங், ஸ்பொட் ஃபிக்சிங் செய்தால் எழுகிற மாதிரியான சர்ச்சை, பொது மக்களின் ஆத்திரம் ஐ.பி.எல்லில் எழவே இல்லை. இத்தனைக்கும் ஐ.பி.எல்.லில் நடக்கும் ஊழல் எண்ணிமாளாது.

ஐந்து இளம் ஐ.பி.எல். வீரர்கள் ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபட்டார்கள் என்ற செய்தி கிடக்கிறது. மும்பை கிரிக்கெட் மைதானத்திற்கு சுதி ஏற்றிக் கொண்டு வந்த நடிகர் ஷாருக் கான் செய்த சேஷ்டைகளுக்கு அல்லவா முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? மும்பையில் அவர் தனது குடும்பப் பரிவாரங்களுடன் மைதானத்திற்குள் நுழைவதைத் தடுத்தார்கள். சென்னையில் தனக்கு சொந்தமான அணி ஜெயித்ததும் அதே குடும்பப் பரிவாரங்களுடன் மைதானத்தில், இறங்கி, லைவ் தொலைக்காட்சியில் நீண்ட லெக்சர் கொடுத்து அதை ஈடு செய்தார் ஷாருக். அவரை ஓம் சாந்தி ஓம் வசனங்களையெல்லாம் பேச வைத்து ரசிகர்களை மகிழ்வித்தார்கள். ஓர் வினாடி சந்தேகம் ஏற்பட்டது. இது கிரிக்கெட் நிகழ்வா, சினிமா நிகழ்வா?




மும்பை ஹோட்டலில் அவுஸ்ரேலிய வீரர் போமஸ பாட்ச் 'பாலியல் பலாத்காரம்' செய்ய ஒரு அறையை ஏற்பாடு செய்து கொடுத்தது ஏன் என்பது பற்றி டெக்கான் அணியிடமிருந்தோ பெங்களூரு அணியிடமிருந்தோ எந்த விளக்கமும் இல்லை. கிரிக்கெட் வீரர்களைப் பணத்திற்கும் பைங்கிளிகளுக்கு வளைக்கும் இத்தகைய பார்ட்டிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு பதில் அந்தப் பார்ட்டிகளைப் பற்றி செய்தி வராமலிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. ஓரிரு நாட்களிலேயே இந்தக் காயம் செயற்கையாக ஆற வைக்கப்பட்டது. பாலியல் பலாத்காரம் நடந்ததாகச் சொன்னவர் தான் கற்புக்கரசி என நிரூபிக்கிறார். அவரின் 'வருங்காலக் கணவர்' என்ற அறிமுகத்தைப் பெற்றவர்தான் அவுஸ்ரேலிய வீரரிடம் அடிவாங்கியதை மன்னித்துவிட்டேன் என்கிறார்.

தாம் காசு வாங்கியதையும் இப்படியே மன்னிப்பார்களா என காத்திருக்கும் ஐந்து இளம் ஐ.பி.எல். வீரர்களுக்கு பி.சி.சி.ஐயின் கருணை என்றும் உண்டு. ஏனெனில் திருடர்களுக்குத்தான் தெரியும், திருடி மாட்டிக்கொள்ளும் போது ஏற்படும் வேதனை.

**- மாயா**

**ஐபிஎல்** 5க்கு கிடைத்துள்ள அமோக ஆதரவை மறுப்பதற்கில்லை. முக்கியமாக, ஐபிஎல் புதிதாக கணிசமான பார்வையாளர்களை கிரிக்கெட்டுக்கு ஈர்த்துள்ளது. கிரிக்கெட் ஒரு டி.வி. விளையாட்டு மட்டுமே என்பதில் இருந்து மாறுபட்டு அரங்குக்கு சென்று பார்ப்பதை ஒரு கொண்டாட்டமாக மாற்ற முயல்கிறது. ஆனால் இந்தப்




புது பார்வையாளர்கள் கிரிக்கெட் ஆர்வலர்களா? அவர்கள் பந்தை கவனிப்பதில்லை, பந்து தம் பக்கம் வருமா, தம் மூஞ்சை டி.வியில் தெரியுமா? இதுதான் அவர்களை ஆட்கொள்ளும் ஒரே அக்கறை. அவர்கள் கண்ணில் கிரிக்கெட் படவே இல்லை. இறுக்கமாய் ஆடையணிந்த இளம்பெண்களை நோக்கி வெறுமனே குரங்கு போல் கிறீச்சிட்டு, தங்களது முகமூடி, பலவர்ண மேக் அப், தொப்பி, விக் ஆகியவற்றை சரி செய்து கொண்டு, எழுந்து அங்கிங்கு ஓடியபடி, கத்துவது, ஆரவாரித்தபடி இருந்தனர். அரங்கில் நிகழும் ஐபிஎல்லை கிரிக்கெட் மைனஸ் கேளிக்கை என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும்.

கால்பந்தாட்டம் போன்று குறுகிய காலகட்டத்தில் உக்கிரமாக ஆடக் கூடிய ஆட்டம் அல்ல கிரிகெட். அது அமெரிக்கர்களிடையே பிரபல மாகாததற்கும் இதுவே காரணம். கிரிக்கெட்டை கால்பந்தாட்டமாக மாற்ற முடியாது. அப்படி செய்யும் போது நமக்கு அந்த ஆட்டத்தின் முழு அனுபவமும் கிடைக்காது. T20 ஆட்டத்தின் முக்கிய நோக்கம் மக்களை ஓரிடத்தில் கூட்டி கேளிக்கைகள் வழங்குவது. கிரிக்கெட் என்பது இதற்கான பாவனை மட்டுமே.

ஐபிஎல் இன்று மோசமான நிர்வாகம் மற்றும் காமத்தையும் வெற்றுக் கிளர்ச்சிகளையும் பிரதானமாக்கி மக்களை ஏமாற்றி பணம் பிடுங்குவதற்கான உதாரணமாக உள்ளது. இதற்கு எதிராக பேசுபவர்களுக்கு இந்திய கிரிக்கெட் ஆணையம் தடை விதிக்கும் (கீர்த்தி ஆசாத்), அல்லது விமர்சிப்பவர்களை தமது வர்ணனையாளராக்கி கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் (ஹரஷா போக்ளே, மஞ்ச்ரேக்கர்) அல்லது ஐபிஎல் லாபத்தில் இருந்து சன்மானம் வழங்கி வாயை அடைக்கும் (முன்னாள் வீரர்களுக்கு). பார்வையாளர்கள் அதிருப்தி அடையாமல் இருப்பதற்காக குத்துப்பாட்டு, சியர் கேர்ள்ஸ், ஆடம்பர அலங்காரங்கள், வாண வேடிக்கை. எப்படி ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது பொருளின் விளம்பரத்துக்காக ஒரு சினிமா, கிரிக்கெட் நட்சத்திரத்துக்கு அளிக்கும் கோடிக்கணக்கான பணத்தின் சுமை வாடிக்கையாளனுக்குப் போய் சேர்கிறதோ அதைப போன்றுதான் இதுவும்.

**- ஆர்.அபிலாஷ்**

**ஐ.பி.எல்லின** ஆறு ரன்களை டெஸ்ட் போடடியின் ஆறுடன் ஒப்பிடுவதை நான் நிறுத்திவிட்டேன். வர்ணனையாளர்கள் ஐ.பி.எல்லின் ஒவ்வொரு ஆறும் உலகம் முழுதும் கேட்கப்படும் ஒலி என்பது போல பேசுவதைக் கேட்டு நான் உணர்ச்சி வசப்படுவதில்லை. 19 வயதுக்குக் குறைந்த ஆட்ட அணியிலிருந்து இப்போதுதான் ஆட வந்திருக்கும் சின்னப்பையனின் பந்துவீச்சை க்ரிஸ் கெயில் அதிரடியாய் ஆடுவது 'நம்பமுடியாத' ஒன்றல்ல என்று எனக்குத் தெரியும். அது 'பரபரப்பான'தும் அல்ல, 'திகைக்க வைப்பதும்' அல்ல.

அந்தக் கணத்தை ரசிக்கிறேன். ஆனால் உடனே என் கவனம் அந்த 4, 6 அல்லது விக்கெட்டை மக்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதில் செல்கிறது. மிட்விக்கெட்டின் மீதான ஸிக்ஸருக்கு ஃபீல்ட் செய்துகொண்டிருக்கும் அணித்தலைவரின் எதிர்வினை எப்படி இருக்கிறது? பந்து வீச்சாளர் அடுத்து என்ன செய்வார்? மட்டையாளர் மீண்டும் அதே போல் அடிக்க முயற்சிப்பாரோ? ஃபீல்டிங் மாற்றங்களை அவர் கவனிக்கிறாரா? இவை எல்லாம் எனக்குப் போதுமான அளவு கிடைப்பதில்லை.

காரணம் : ஐ.பி.எல் தொலைக்காட்சியில் காட்டபபடும் விதம். நான் திரையின் மேல் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் விளம்பரங்களைப் பற்றிக் கூட சொல்லவில்லை. கமெரா வேலையைப்பற்றி பேசுகிறேன். சில சமயங்களில் ஒரே பவுண்ட்ரியை மூன்று முறை காட்டுவதில் அர்த்தமே இல்லை. ஒவ்வொரு ஸிக்ஸரையும் திரும்பத் திரும்பக் காண்பிக்கத் தேவையில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சியர்லீடர்களுக்கு அருகில் காமெரா போவது கேலிக்குரிய விஷயம்.

அதற்குப் பதிலாய், பந்து வீச்சாளரை அருகில் காட்டலாம், மைதானத்தை வான்வெளியிலிருந்து படம் பிடித்துக் காட்டலாம், ஃபீல்ட் செய்யும் அணித்தலைவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுவ்தில் சற்று கவனம் செலுத்தலாம். தனது அணி ரன் குவிப்பதை ஆர்வத்துடனோ பதற்றத்துடனோ பார்த்துக் கொண்டிருக்கும் பெவிலியனில் அமர்ந்திருக்கும் சகவீரர்களைக் காட்டலாம். நடந்துகொண்டிருப்பது ஒரு பந்தய ஆட்டம் (திருவிழா அல்ல), என்று நம்மை உணர வைக்கவும் தயாரிப்பாளர்கள் சற்று அக்கறை எடுக்கலாம்.

திரும்பத் திரும்பக் காட்டப்படும் ஆட்டத்தருணங்களிலும், சத்தமான ஐ.பி.எல் வர்ணனைகளின் இடையேயும் ஆட்டத்தின் நுட்பவேறுபாடுகள் தொலைந்து போய் விடுகின்றன. இப்படி சொல்வதற்காக நீங்கள் என்னைக் கேலி செய்யலாம் - 'இதுவும் ஒரு ஆட்டம்? இதில் நுட்பம் வேறு இருக்கிறதா?' என்று. இதற்கு என் அழுத்தமான பதில், 'ஆமாம், இருக்கிறது.'

நுட்பங்கள் நிறைய இருக்கின்றன. உங்கள் தொலைக்காட்சித் திரைகளில் அவற்றை நீங்கள் பார்ப்பதில்லை, உங்கள் வர்ணனையாளர்களிடமிருந்து அவற்றைப்பற்றி தேவையான அளவு கேட்பதில்லை, அவற்றைப் பற்றி உங்கள் செய்தித்தாள்களிலும், இணையதளங்களிலும் அதிகம் படிக்கக் கிடைப்பதில்லை.

ஐ.பி.எல் போட்டியை கேலிக்கூத்து என்று சொன்னால் யாரெல்லாம் கொதிப்படைகிறார்களோ அவர்களில் சிலர்தான் மொத்தப் பந்தயமும் ஒரு கேலிககூத்து என்று உங்களை நம்பவைக்கிறார்கள்.

என்ன ஒரு முரண் புதிர்?(Paradox)

**- சித்தார்த்தா**

ஐ.பி.எல் லை அழகாக்குவதற்காக உலகெங்குமிருந்து 'சியர் லீடர்ஸ்' எனப்படும் உற்சாகமூட்டும் மங்கையரைப் பெருமளவில் இறக்கியிருப்பது மட்டுமல்லாமல், நடிகைகளையும் ஒவ்வொரு அணிக்கும் சிறப்புத் தூதுவராக நியமித்து மைதானத்துக்கு வரவைத்து, போட்டிகளை வண்ணமயமாக்குவதில் இம்முறை கூடிய கவனம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, பல அணிகளின் உரிமையாளர்கள் - பங்குதாரர்களாகவும் அழகான பெண்களே முன்தள்ளப்படுகிறார்கள். இதோ ஐபிஎல் கமெராக்கள் அதிகம் படம்பிடித்த சில பெண்கள்.



காயத்ரி ரெட்டி: ஹைதராபாத் டெக்கான் சார்ஜஸ் அணியின் உரிமையாளர். டெக்கான் குரோனிக்கிள் பத்திரிகாதிபரின் மகள்.



ப்ரீத்தி ஸிந்தா: கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர். பிரபல பொலிவூட் நடிகை.




நீட்டா அம்பானி: மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர். பிரபல தொழிலதிபர் முகேஷ் அம் பானியின் மனைவி.



ஷில்பா ஷெட்டி: ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர். பிரபல பொலிவூட் நடிகை.



ஜூஹி சாவ்லா: கொல்கத்தா நைற்ரைடர்ஸ் அணியின் பங்காளர். பிரபல பொலிவூட் நடிகை.



சானியா மிர்ஸா: புனே வோரியர்ஸ் அணிக்கு அழகுத் தூதுவர்.



கத்ரினா கைஃப்: இவரும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு அழகுத் தூதுவர். நடிகை.



நர்கிஸ் ஃபக்ரி: டில்லி டேர் டெவில்ஸ் அணிக்கு அழகுத் தூதுவர். பொலிவூட் நடிகை.

# தடுத்துவைக்கப்பட்டவர் 6 வருடங்களின் பின் விடுதலை

வரணிப் பகுதியில் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த இளைஞன் நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தால விடுதலை செய்யப்பட்டார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இராசையா (ஆனந்தராசா வயது -31) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

சைக்கிள் பார் பகுதியில் வெடி பொருட்கள் மற்றும் வயர் வைத்திருந்த குற்றச்ச்ாட்டில் கொடிகாமம் பொலிஸாரால் 2006 ஆம் ஆண்டு ஏப்பிரல் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். பின்னர் காங்கேசன்துறைக்கும், தொடர்ந்து கொழும்பு 6 ஆம் மாடிக்கும் கொண்டு செல்லப்பட்டார். குறித்த இளைஞனின் வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் வழக்கு அனுராதபுரம், வவுனியா மேல் நீதிமனறங்களுக்கு மாற்றப்பட்டு மீண்டும் யாழ். மேல் நீதிமனறத்திற்கு மாற்றப்பட்டது. குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்படவில்லை எனத தெரிவித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜெ.விஸ்வநாதன் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞனை விடுதலை செய்தார். எதிரியின் சார்பில் சட்டத்தரணி முறெமீடியஸ் ஆஜரானார்(137)

## வலுவடையும் உறவு விசா கட்டுப்பாடு தளரும்

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் இருதரப்பு உறவுகள் வலுவடைந்து வருகின்றன. இலங்கை மற்றும் ஈரானிய சுற்றுலாப் பயணிகள் விசா இன்றி பரஸ்பரம் பயணிக்க வழி செய்யும் புரிநதுணர்வு ஒப்பந்தமொன்றில் இலங்கையும் ஈரானும் வெகு விரைவில் கைச்சாத்திடவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அரசு முறைப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஈரானிய வெளிவிவகார பிரதி அமைச்சர் கலாநிதி அப்பாஸ் ஆராய்ச்சியுடனான இரு தரப்பு பேச்சு வார்த்தை குறித்து கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த ஏற்பாடு குறித்து இரு நாடுகளும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பங்கு வர்த்தக மோசடி ஜே.வி.பி. கொதிப்பு

கொழும்பு பங்குச் சந்தையில் சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் பணத்தை பயன்படுத்துவதற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நஷ்டத்தில் இயங்கும் கிறெய்ன் எலிவேட்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் 10 ஆயிரம் பங்குகளை வாங்குவதற்கு ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து (ஈ.பி.எவ்) 1.24 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார். இப்பங்குகள் தலா 245 ரூபா வீதம் வாங்கப்பட்டதாகவும் அப்பங்கின் விலை இன்று 36 ரூபாவாக குறைந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

இப்பங்குக் கொள்வனவானது ஊழியர் சேமலாப நிதியத்தின் விதிகளை மீறுவதாக உள்ளது என அவர் கூறியுள்ளார். ஊழியர் நம்பிக்கை நிதிய பணமும் இவ்வாறான வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்படுவதாகவும் தேசிய சேமிப்பு வங்கியும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன்நெத்தி கூறினார்.

### எம்பிலிப்பிட்டியில்...

மீதே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் அதில் இருவர் காயமடைந்துள்ளதோடு ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் யார் என்பது குறித்து எம்பிலிபிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

### ஆளுநர்...

அழைத்து வரப்பட்டார். அங்கு மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து சமயத் தலைவர்களின் ஆசிரியுரைகள் இடம்பெற்றன.

இச் செயலகத்தின் பெயர்ப் பலகையினை அமைச்சர் அவர்களும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்தததைத் தொடர்ந்து நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்துவைத்தனர்.

சுமார் 25 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளைக் கொண்டதாகக் கட்டப்பட்ட இச் செயலகத்தை அமைச்சர் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் புதிய கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் கடந்த காலங்களில் வடமாகாண ஆளுநரின் செயலகத்ததிற் கென்று நிரந்தரமான கட்டிடம் இல்லாத நிலையில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்துள்ளனர். இப்புதிய செயலகத்தினூடாக எதிர்காலத் தில் மக்கள் தமக்கான தேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மக்களுக்கு புதியவரல்ல யாழ். மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் சேவையாற்றி வருகின்றார் என்பதுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய செயலகத்திற்கூடாக மக்களின் சேவைகள் துறைசார்ந்த அதிகாரிகள் ஊடாக இலகுபடுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் உள்ளிட்ட மாகாணத் திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### சிறுவர் கல்விக்கு...

மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது. இங்குள்ள மக்களது வாழ்வு முன்னேற்றம் காண்பதற்கு எல்லோரது ஒன்றிணைந்த உழைப்பு முக்கியமானது.

இதனிடையே நீண்டகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வு தற்போது பல்வேறு வகைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இருந்த போதிலும் இங்குள்ள சிறார்களது கல்வி மேம்பாடு மற்றும் இந்நூலகத்தின் மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பிலான தேவைகள் தொடர்பில் சிங்கப்பூர் அரசு நிச்சயம் முழுமையான ஒத்துழைப்பு ஒத்தாசையும் வழங்கும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

சிங்கப்பூர் வெளிவிவாகர அமைச்சர் சண்முகம் தலைமையிலான குழுவினர் நூலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டதுடன் தேவைகள் தொடர்பிலும் ஆராய்ந்தறிந்து கொண்டனர். அங்கு வெளிவிவகார அமைச்சர் அவர்களுக்கு யாழ் மாவட்டத்தினதும் நாட்டினதும் தற்போதைய நிலவரம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவாக எடுத்துரைத்தார்.

இதன்போது நாட்டில் வாழும் சகல மக்களின் நலன்களை முன்னிறுத்திய வகையிலும் நாட்டின் நலனையும் மக்களின் நலனையும் ஒரே தளத்தில் வைத்துக்கொண்டு தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் சிங்கப்பூர் எவ்வாறு முன்னேற்றத்துடன் கூடியதான வகையில் அபிவிருத்தி அடைந்துள்ளதோ அதே போன்று தமிழர் பகுதிகளும் முன்னேற்றம் காண வேண்டும் என்பதே தமது விரும்பம் எனவும் சுட்டிக் காட்டினார்.

முன்பதாக நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு வருகை தந்திந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் அவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி கௌரவித்து வரவேற்றதைத் தொடர்ந்து சிறப்புப் பூசை வழிபாடுகளிலும் கலந்துகொண்டனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிசின் அழைப்பின் பேரில் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்முகம் தலைமையிலான குழுவினர் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். நாளை வரை இலங்கையில் இவர்கள் தங்கியிருப்பர். இவ்விஜயத்தின் போது குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெற்று வரும் மீள்குடியேற்றம் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்களில் இக்குழுவினர் கவனம செலுத்தவுள்ளனர்.

இதன்போது அவரது பாரியார் திருமதி சீதா சண்முகம் இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவராலயத்தின் தூதுவர் சேவேசென் யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட இரு நாடுகளினதும் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர்.

## யாழ். ஈச்சமோட்டையில் பொலிஸ் நடமாடும் சேவை

யாழ். பொலிஸாரினால் நேற்று ஈச்சமோட்டைப் பகுதியில் நடத்தப்பட்ட பொலிஸ் நடமாடும் சேவைகளில் இரண்டாயிரம் வரையான பொதுமக்கள் பயனடைந்ததாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை முதல் ஈச்சமோட்டை சனசமூக நிலையப் பகுதியில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையின் போது 40 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் அப்பகுதி மக்களுக்கு பழமரக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொலைந்த அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களும் கையேற்கப்பட்டதுடன் பொலிஸ் றிப்போட், தொலைந்த வாகன அனுமதிப் பத்திரங்களுக்கான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


மேலும் பொலிஸாரினால் மருத்துவ சேவையும் வழங்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் சாதாரண நோய்களுக்கான மருத்துவ சேவையும் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## கிராஞ்சியில் புதிய சந்தை நேற்று அடிக்கல் நாட்டுவிழா

(கிராஞ்சி)

பூநகரி கிராஞ்சிப் பகுதியில் புதிய சந்தைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நண்பகல் நடைபெற்றது. பூநகரிப் பிரதேச சபை தவிசாளர் பொ.ஸ்ரீஸ் கந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலர் கே.என்.வசந்தகுமார், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன், ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் தி.றொபின்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (149)



யாழ். விஜயம் செய்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் திரு.சண்முகத்துடன் வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வடபகுதி நிலவரம் தொடர்பாக உரையாடும் போது...

### குற்றவியல்...

சந்தேகநபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் பொலிஸாரின் விசாரணைகளுக்கு அது உதவியாக அமையும் என ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா குறிப்பிட்டார். எனினும் நீண்டநேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்படும் சந்தேகநபர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான சாத்தியம் அதிகம் உள்ளதால் அது குறித்தும் சிந்திக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. இதன்காரணமாக குற்றவியல் சட்டத்தில் உத்தேச திருத்தம் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு தமது சங்கம் ஆதரவை வழங்கும் என அதன் செயலாளர் சட்டத்தரணி சஞ்சய கமகே கூறினார்.

### பாடசாலை...

தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் தாக்குதலுக்கு உள்ளான மேற்படி அதிபரும், இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளருமான ஜோசப் ஸ்ராலின் இருவரும் முறையிட்டனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் அதிபர் நேசகுமார் தனது பாடசாலை அலுவலகத்தில் காலை 8.30 மணியளவில் இருந்த வேளை, கோமரசன்குள அதிபர் மற்றும் 11 பேர் அடங்கிய குழுவினர் கொட்டன்களுடன் வந்து அவர் மீது சரமாரியான தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றனர்.

குறித்த அதிபருடன் வந்த 11 பேரும் பாடசாலைச் சீருடையுடனேயே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தலை,முதுகு,கை போன்ற இடங்களில் பலத்த காயங்களுக்குள்ளான அதிபர் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அதிபர் மீதான தாக்குதலை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கட்டிப்பதாகவும், இது தொடர்பாக வலயக் கல்விப்பணிப்பாளர் மற்றும் மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கும், தெரியப்படுத்தியுள்ளதாக ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (12)

# பிரிவினைக்கு எதிரான தமிழர் இயக்கம் விரைவில்

## அருண் தம்பிமுத்து தலைமை தாங்குகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரிவினையை கண்டிக்கும் "ஸ்ரீலங்காவுக்கான தமிழர்கள்" எனும் புதிய தமிழ் இயக்கமொன்றை அருண் தம்பிமுத்து விரைவில் ஆரம்பிக்கவுள்ளார். தமிழீழ விடுதலை புலிகளினால் 1988 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சாம் தம்பிமுத்துவின் மகனான அருண் தம்பிமுத்து, ஏனைய சமூகங்களைப் போல நாட்டு விவகாரங்களில் தமிழ் இளைஞர்களும் பங்குபற்றும் நிலைமையை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கம் என தெரிவித்தார்.

சகல சமூகத்தினரும் சமாதானமாக வாழும் நல்லிணக்கத்தை கொண்டுவருவதே இந்த இயக்கத்தின் பிரதான நடவடிக்கை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்தியிலும் வேறு செயற்பாடுகளிலும் தாம் பங்குதாரர்களாகும் வகையிலும் உண்மையான சமாதானத்தை கொண்டுவருவதிலும் ஆர்வமுள்ள பெருமளவானோர் ஐரோப்பா விலும் வேறு இடங்களிலும் உள்ளனர். இவர்களுக்கான அரங்கம் ஒன்றை ஏற்படுத்தவே இந்த அமைப்பை தோற்றுவிக்கவுள்ளதாக அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

இவர்கள் தமது அபிலாஷைகளை தெரியப்படுத்த விரும்புகின்றனர். இதனால் தான் அவர்களின் கனவை நனவாக்க வேணடும் என நான் நினைத்தேன் என அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தங்களுக்கு பணிந்து போவதும் தீவிரவாத போக்கு மீண்டும் திரும்புவதும் கவலையளிக்கும் விடயங்களாகும் என அவர் தெரிவித்தார்.

பொது எதிர்க்கட்சியின் மே தின கூட்டத்தில் இரா.சம்பந்தன் தேசியக் கொடியை வைத்திருந்ததை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், மாவை சேனாதிராஜா இது தொடர்பில் வருத்தம் தெரிவித்ததோடு சகல நம்பிக்கைகளும் நொறுங்கிப் போயின என அருண் தம்பிமுத்து மேலும் குறிப்பிட்டார்.



தாய்லாந்துக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அந்நாட்டின் "மகாசுலாலோங்கொன்றாஜ" பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2600 சம்புத்தத்வ ஜயந்தி வைபவத்தின் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

உலகின் 58 நாடுகளின் பௌத்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.ஜனாதிபதியுடன் தாய்லாந்து சென்ற இலங்கைக் குழுவினரும் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

# மேலும் 40 இலங்கையர்கள் அவுஸ்ரேலியாவில் இறங்கினர்

புகலிடம் தேடும் இலங்கையர்கள் 40 பேரைக் கொண்ட படகொன்று அவுஸ்ரேலியாவின் கொகோஸ்தீவை சென்றடைந்துள்ளது இவ்வாரம் அவுஸ்திரேலிய கடற்பரப்பை அடைந்த இரண்டாவது அகதிகள் படகு இதுவாகும்.

கொகோஸ் தீவானது அவுஸ்ரேலியாவுக்கும் இலங்கைக்கும் மத்தியில் இருநாடுகளிலிருந்தும் 3 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 27 தீவுகளைக் கொண்ட இத்தீவுக்கூட்டத்தில் பெரும்பாலும் மனிதர்கள் வசிப்பதில்லை.

அங்கு படகில் வந்தவர்களை கொகோஸ் கழகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வருகையினால் இத்தீவின் தொண்டர்கள், பல்பொருள் அங்காடிகள், சமூக சேவகர்கள், கழங்கள் மீதான அழுத்தம் அதிகரிக்கும் என தன்னை இனம் காட்ட விரும்பாத உள்ளூர் வாசியொருவர் தெரிவித்துள்ளார்.

திடீர் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப, இத்தீவில் போதிய விநியோகங்கள், வழங்கள் இல்லையென உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர். தொண்டர்கள் தமது ஏனைய தொழில்களைவிட்டுவிட்டு, இவர்களுக்கு தொண்டாற்ற வேண்டியிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை படகில் சென்றவர்களைத் தவிர, இவ் வருடம் அவுஸ்ரேலியாவை அடைந்த புகலிடம் தேடுவோரின் எண்ணிக்கை 576 ஆக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 211 இலங்கையர்கள் புகலிடம் தேடி அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

# அரசியல்வாதிகள் மீது இடி விழுவதில்லை



(கொழும்பு)

தவறு செய்வோர் மீது இடி விழ வேண்டுமென பொது மக்கள் வேண்டி நிற்கின்ற போதும் தவறு இழைக்கும் அரசியல்வாதிகள் மீதோ அரச அதிகாரிகள் மீதோ இடி விழுவதில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இடி, மின்னல் தாக்கத்தால் விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள், விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களே உயிரிழந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று இடம்பெற்ற செயற்திட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மின்னல் தாக்கத்தில் இருந்து பொது மக்களை பாதுகாக்கவென மின்னல் தாக்கத்தை குறைக்கும் தேசிய குழு அமைக்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

நாட்டில் அண்மைக் காலமாக பூமியதிர்வுகள் உணரப்பட்டு வருவதால் புதிய கட்டடங்களை அமைக்கும் போது அதன் தரம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சுனாமி வீட்டுத் திட்டத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு



(கல்முனை)

கல்முனை குருந்தையடி நெதர்லாந்து செஞ்சிலுவைச் சங்க சுனாமி தொடர்மாடி வீட்டுத் திட்டத்திற்கான குடிநீர் விநியோகம் குறைக்கப்பட்டுள்ளதனால் அதில் குடியிருக்கும் சுமார் 1200 பேர் ஒரு மாத காலமாக குடிநீர்ப் பிரச்சினை மற்றும் இதர தேவைகளை பூர்த்தி செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இவ்வீட்டுத் திட்டத்திலுள்ளவர்கள் தாம் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள், மற்றும் கோரிக்கைள் அடங்கிய மகஜரை நேற்றுக் காலை நீர்வழங்கள் அதிகார சபையின் அம்பாறை பிராந்திய காரியாலயம் அமைந்துள்ள அக்கரைப்பற்றுக்குச் சென்று பிராந்திய முகாமையாளர் ஐ.எல். ஹைதர் அலியிடம் கையளித்தனர்.

தற்போது வரட்சியான காலநிலை, பாவனையாளர்களின் அதிகரிப்பு, புதிய இணைப்பு போன்றவற்றினாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதெனவும், கூடிய விரைவில் இதற்கான தீர்வு வழங்கப்படுமெனவும் பிராந்திய நீர் வழங்கள் அதிகார சபையின் முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரியவதி கலப்பதிக்கு விளக்கமறியல்

நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டதன் காரணமாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், உதவித் தவிசாளருமான திருமதி ஆரியவதி கலப்பதிக்கு மீது நீதிமன்றப் பதிவாளரால் துறைமுகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இச்சந்தேக நபர் சார்பாக பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை மஜிஸ்ரேட் நீதிமன்றம் நீதிவான் யு.எல்.எம்.அஸ்ஹர் நேற்று உத்தரவிட்டார்.

# கடல் எல்லை விஸ்தரிப்பு ஐ.நா.வுடன் முக்கிய பேச்சு

(கொழும்பு)

இலங்கையை சுற்றியுள்ள கடற்பரப்பில் கடல்சார் வளங்கள் இருக்கின்றமையினால் எதிர்காலத்தில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இலங்கையின் கடல் எல்லையை 23 மடங்குகளால் அதிகரித்துக்கொள்வதற்கு ஐ.நா.வில் அனுமதி கோரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியின்றி ஆழ்கடல் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடமுடியாது. அந்தவகையிலேயே கடல் எல்லையை அதிகரிக்க ஐ.நா.விடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது, புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியத்தின் தலைவர் கலாநிதி என்.பி. விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவிக்கையில், இந்த யோசனைகளுக்கு எதிர்ப்புகள் எழுமாயின் இந்தியாவுடன் கலந்தாலோசித்து கச்சதீவை பெற்றுகொண்டதைப்போன்று இந்தோனேஷியா, பங்களாதேஷ், பர்மா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுடன் கலந்தாலோசித்து மேற்கூறப்பட்ட கடல் எல்லையை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### செல்வர் கோபாலபிள்ளை

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வர் கோபாலபிள்ளை நேற்று இரவு 11.00 மணியளவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நிதர்ஷன் (மகன்)
0779127025

(C/172)


## விளம்பர சேகரிப்பாளர்கள் தேவை

**விளம்பரம் சேகரிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- ◈ பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.
- ◈ மாதாந்த அடிப்படைச் சம்பளத்துடன் தரகுப் பணமும் வழங்கப்படும்.
- ◈ சிறந்த பேச்சாற்றலும் விளம்பரங்களைச் சேகரிக்கும் ஆற்றலும், இத்துறையில் முன்னனுபவமும் அவசியமாகக் கருதப்படும்.

அடிப்படைத் தகைமை :

- ◈ G.C.E A/L சித்தியடைதிருத்தல்

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரத்தினை இல.373, பிரதான வீதி, தினமுரசு என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.